VASANTHAM Tamil Monthly 2 - 2 مجلة الربيع ملحق مجلة البشرى باللغة التاميلية

# வசந்தம்

மாத இதழ்

AR-RABAE

ஜூன் 2008

வாசிக்க மட்டுமல்ல... வாழ்க்கைக்கும்!

June 2008



## போதைப் பாதாளத்தில்...!



அறிவுப் பாரின் விழிகள்..!
எம் வாழ்வின் ஒளிகள்..!!

சுபிட்சம் எங்கே..?



﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اجْتَنِبُوا كَثِيرًا مِنَ الظَّنِّ إِنَّ بَعْضَ الظَّنِّ إِثْمٌ وَلَا تَجَسَّسُوا وَلَا يَغْتَبْ بَعْضُكُمْ بَعْضًا أَيُحِبُّ
أَحَدُكُمْ أَنْ يَأْكُلَ لَحْمَ أَخِيهِ مَيْتًا فَكَرِهْتُمُوهُ وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللَّهَ تَوَّابٌ رَحِيمٌ﴾ سورة الحجرات اية ١٢



இறைநம்பிக்கை கொண்டவர்களே! அதிகமாக சந்தேகம் கொள்வதைத் தவிர்ந்து கொள்ளுங்கள்! ஏனெனில், சில சந்தேகங்கள் பாவமாக இருக்கின்றன!



துப்பறிவதில் ஈடுபடாதீர்கள்!!



இன்னும் உங்களில் ஒருவர் மற்றவரைப் பற்றி புறம் பேச வேண்டாம்!!!

-திருக் குர்ஆன் 49:12


# வசந்தம்
மாத இதழ்

வாசிக்க மட்டுமல்ல.. வாழ்க்கைக்கும்!




VASANTHAM - Ar-Rabae
Tamil Monthly
June 2008
ஜூன் 2008
மலர் 2 இதழ் 2



**CHIEF PATRON**
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari

**EDITOR**
ஆசிரியர்
M.A. Abdul Musavir

**EDITORIAL BOARD**
N.M.M. Hussain
Ameer Hasan Nainar
Faizal Muhammad
Muhammad Jabir
Farzana Rafeeq
Zinoofa Ansar

**DESIGN**
வண்ண உருவரைபடம்
Nader Bellal
IT Section-IPC

**PUBLISH**
வெளியீடு
IPC
KUWAIT



**CONTACTS**
தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT

**DIAL**
2444116, 2444117 Extn: 208

**FAX**
2400057
Attn: IPC—VASANTHAM

**e-MAIL**
amusavir@gmail.com

**WEBSITE**
www.ipc-kw.com


# இந்த இதழில்..!


20 போட்டி
அறிவுக் குறுக்கெழுத்து-2

ஆசிரியரிடமிருந்து...!
விஷம்போல் ஏறி... விண்ணைத் தொடும் விலைவாசி! 3

முகப்புக் கட்டுரை
போதைப் பாதாளத்தில்..! 4

கல்வி
அறிவுப்பாரின் விழிகள்...! எம் வாழ்வின் ஒளிகள்...!! 13

துணை முகப்புக் கட்டுரை
சுபிட்சம் எங்கே? 14















2 வாசகர் சுகந்தங்கள்
வாழ்வின் வழிகாட்டி!

7 இறைவன்
இறைவன் தனித்தவனா?

8 விருந்தினர் பக்கம்
மனித அகங்களுடன் அளவளாவும் அல்குர்ஆன்!

9 மார்க்க விழுமியங்கள்
சிந்தனைப் பாதையின் சீர்மிகு வழித்தடங்கள்!

10 திருமறைத் தெளிவுரை
அமைதியளிக்கும் உறக்கத்தை அளித்தவன் யார்?

11 விருந்தினர் பக்கம்
துன்பத்தில் கரம் நீட்டும் இறைவனை.......

12 ஆளுமை,
IPC வழித்தடங்கள்

16 பண்புநலன்
வாழ்வின் ஓடதம்.. வடுக்களின் ஒத்தடம்..!

20 கடைசிப்பக்கம்

17 இஸ்லாமிய திண்மைத் தழுவல்கள்:
வாழ்வியலின் வசந்தவியல்!

மனிதம்
மனித உரிமைகள்: ஓர் இஸ்லாமியப் பார்வை

رسائل من القارئين-من مدير التحرير-المخدرات المهلكات الشباب.. فما هوالحل؟ - أأرباب متفرقون خير. أم الله الواحد القهار - أفلا يتدبرون القرآن؟ - الإسلام....نور في الظلمات ﴿سلسلة ٢﴾ - مشاهد القيامة - الحياة البشرية كما خطها النبي - أنشطة اللجنة - العلم نور - أين السعادة - طريقة التحية فى الإسلام والديانات الأ خرى - الحقوق الإنسانية فى الإسلام - الكذب - حديث المهتدين و المهتديات




# சிறகொடிந்த போதினும் வசந்த வானில் பறக்கின்றேன்...!.

## ஆம்! (வசந்தம் ஒரு அறிவாகாயம்.)




இரை தேடி கடல் கடந்து வந்து, இன்று நிறையில்லா குறை கண்டு, கரை தெரியா கப்பல் போல், சிறகொடிந்த பறவையாய் - சிறைகைதியாய் வாழ்ந்து வருகின்றேன். வசந்தகாலம் வருமோ இனி என மனவருத்தம் கொண்டிருந்தேன்.
என் மனவேதனை வடிந்தது, ஆம்..! வசந்தம் -மே-மாத இதழாய் வந்து நின்றது என் முன்னே..! குளிர்ந்தது என் கண்ணே..!
வாசிப்பதற்கு மட்டுமா வசந்தம்.? இல்லை, வழ்வை எப்படி வழிநடத்துவது என்பதற்கும், உண்மையான வாழ்வு எதில் அடங்கியுள்ளது என்பதற்கும், முடிவில்லா அந்த இன்ப வாழ்வு எனக்கு கிடைக்க தயார் செய்துகொள்வது எப்படி? என்றெல்லாம் வசந்தம் மூலம் அறிந்தேன்..புரிந்தேன்... தெளிவு பெற்றேன்..!
தொடரட்டும் உங்கள் பணி!

**ஹம்ஸா**
மாவனல்லை, இலங்கை
மத்திய சிறைச்சாலை
சுலைபியா-குவைத்

மே '08 வசந்த மலர் கண்டேன்! ரவ்தா கவுரவ ஆண்டு விழா,சால்மியா சிறப்பு பட்டமளிப்பு விழா ஆகிய நிகழ்வுகள் - ஆயிரக்கணக்கானோர் இஸஸிலாமிய வாழ்க்கை நெறியை மனமுவந்து ஏற்றுக்கொள்வது, மார்க்க



நெறிமுறைகள் மற்றும் அரபிமொழிப் பாடப் பயிற்சி - போன்ற IPC-இன் அரிய பணிகளை எடுத்துக் காட்டுகின்றன. இதன் மூலம் ஒரு மிகப்பெரும் சாதனைப் பணியை IPC-குவைத்தில் சப்தமில்லாமல் செய்து கொண்டிருப்பதை அறிந்து மனம் குதூகலம் அடைகின்றது.
IPC-இன் இப்பணிகள் வளர இறைவனிடம் இறைஞ்சுகின்றேன்!


வசந்தமலர் வாசகன்
**சே. ஜவஹர் அலி**
பனைக்குளம், தமிழகம்
ஷர்க் - குவைத்

அன்னையின் உயரிய மதிப்பை விளக்கிய தாயே..! கவிதை அபாரம்! இறையச்சம் பற்றிய கட்டுரை அருமை! கம்யூனிஸத்தின் தோல்வியை தோலுரித்தது கடைசிப்பக்கம். நீங்கா ஒளியாய்.. கட்டுரை மிக எளிமை, இனிமை! தொடரட்டும் பணி!

**இ.ஜுபைர் (பர்மா)**
புதுச்சேரி, இந்தியா
ஸுலைபிய்யா - குவைத்

மே மாத வசந்தம் இலக்கிய வாசனையோடு மிளிர்ந்தது. வாழ்வின் அழகிய வெற்றிக்கான அறுசுவை உணவை உண்ட திருப்தி எனக்கு. பைந்தமிழ் வாசனையுடன் ஒரு பத்திரிகை வாசிப்பது மனதுக்கு பெரும் இதமளிக்கின்றது. தொடரட்டும் உங்கள் சேவை! ஓராண்டல்ல... பல்லாண்டுகள் வசந்த சேவை தொடரட்டும்!

**இராஜ்குமார்**
தஞ்சை, இந்தியா
ஹஸாவி - குவைத்



வசந்தம் ஏப்ரல் இதழ் கண்டேன். அட்டைப் படங்களே சிந்தனை செய்ய வைத்துவிட்டது. பசுமை தெரியும் படம் ஒருபுறம், பட்டமரம் காட்டும் பாலை மறுபுறம்! நடுவில் பாலம் நாம் செல்ல வேண்டிய உண்மைப்பாதையை காட்டுகின்றது.
நூலால் வந்தது..சங்கிலியால் போனது.. இறைவனுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியது.வசந்தத்தின் அனைத்து ஆக்கங்களுமே எனது நெஞ்சத்தைத் தொட்டுவிட்டது. வசந்தம் தமிழுலகுக்கு ஒரு நேர்வழி காட்டும் இறைகொடை!

**A. முஹம்மது அமீன் (அபு மாஹின்)**
அம்பகரத்தூர் புதுச்சேரி,
சால்மியா - குவைத்



முட்டாள் பொய்யர்கள் தினம் குறித்த விபரீதம் தெளிவுபடுத்தப்பட்டது மிகவும் அருமை!
விட்டில் பூச்சியா வாழ்க்கை?- குறுங்கதை வாசகர்களின் மனதைத் தொட்டுவிட்டது என்றால் அது மிகையல்ல!
அனைத்து எழுத்தாளர்களும் வழங்கி வருகின்றனர்.

**நூருல் ஹிபா**
புதுச்சேரி,
சால்மியா - குவைத்

விட்டில்...குறுங்கதை நிஜக் கதையா..? அதனை இன்னும் நீட்டி தொடர்கதையாய் தந்திருந்தால் இன்னும் பல அறிவுரைகளைப் பெற்றிருக்க முடியும்!

**அஹ்மத் யாஸீன்**
பர்வானியா - குவைத்

ஸினூ..்.பா அன்ஸாரின் - விட்டில்



கதை தீனார்-திர்ஹம்களுக்காக மட்டுமல்ல ,ரூபாய்களுக்காகவும் வாழ்வை அடகு வைக்கும் பெண்களுக்கும் அவர்தம் பெற்றோருக்கும் ஒரு நல்ல பாடம்! மேற்கத்திய நாகரிகம்கூட பாமரத்தனத்தை இன்னும் கைவிடவில்லை.
இக்குறுங்கதை உண்மையான சம்பவமா?

**குணசீலன்**
இராமநாதபுரம், தமிழகம்
சால்மியா-குவைத்

விட்டில் குறுங்கதை அருமை! வாழ்க்கை வசதிகளுக்காக தன்மானத்தையே அடகு வைப்போர் மத்தியில் மார்க்கம் காத்த விட்டில் நாயகிக்கு ஒரு சல்யூட்!

**முஹம்மத் ரபீக்**
கள்ளக்குறிச்சி, தமிழகம்
ஸுப்ஹான் - குவைத்

கட்டிக்கொண்டோம் என்பதற்காக மனம் ஒத்துப்போகாது தன் வாழ்க்கை குறித்த விஷயத்தில் தூதரின் கட்டளைக்கு மாறு செய்யாமல், அதேவேளை தனது மனத்தின் நியாயமான விருப்பத்துக்கும் செவி சாய்க்கும் தைரிய பரீராக்களை இஸ்லாம் தந்ததை உலகம் உணரட்டும். ஸகீனா மணாளனின் பெண் படித்தரங்கள், காலத்துக்கு அவசியமான தொடர்!
மகளிரின் மகிமையை விளக்கியது புதிய பாணி!

**இ. அப்துர் ரஹ்மான்**
சென்னை
.்.பர்வானியா - குவைத்

வசந்தம் மாத இதழ் ஒரு வருடத்தை பூர்த்தி அடைந்ததையொட்டி, அதன் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் ஏராளமான வாழ்த்தோலைகள் நெஞ்சங்களை வருடச்செய்தது. வசந்த குழுமத்தின் இதயங்கள், ஏனைய நலன்விரும்பிகள் பலரும் பரவசமடைந்தோம். வாழ்த்தோலைகள் மூலம் வசந்தத்தை வாழ்த்தி புத்துயிர் பூக்கச்செய்த அன்பர்கள் அனைவருக்கும் எம் இணையிலா நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். இனிமேலும் புதுவிதங்கள் புனைந்து வசந்தம் உங்கள் கரங்களில் தவழும்! இறையருள் துணை நிற்கட்டும்.

ஏப்ரல் மாத இதழ் தாங்கி வந்த விட்டில் பூச்சியா வாழ்க்கை ஒரு உண்மைச் சம்பவமா என எம் வசந்தத்தின் வாசக நெஞ்சங்கள் பலரையும் வதங்கச்செய்தது. சமூகத்தில் அ..்.தான ஒரு சறுக்கலில் விழுந்த ஒரு இளம் இதயத்தின் இதய கீறல்களே உண்மைச் சம்பவத்தின் தழுவலாக வசந்தத்தில் ஜனனம் செய்தது...!





# விஷம் போல் ஏறி விண்ணைத்தொடும் விலைவாசி



இன்றைய விலையேற்றம் நாளுக்கு நாள் மலையேற்றப்பட்டு மனித நிலை தடுமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றது. விலைகளின் விஷவடிவம் விகாரப்படுத்தப்படுகின்ற அதே வேளை, இதனால் மனிதனின் சம்பாதிப்புக்கள், பொருளீட்டல் முறைகள் வரையறைகளைத் தாண்டி தாண்டவமாடிக் கொண்டிருப்பதும் உண்மையே!

பல நாடுகளின் தொலைக்காட்சி சானல்களின் தலைப்புச் செய்திகள்,விவாத மேடைகள்,அலசல்கள்,மக்கள் மேடைகளில் முக்கிய விஷயம் இதுதான். உணவுக்காக வாழும் உதரங்கள் தற்போது உலக சந்தையிடம் ஒரு கணம் நின்று யோசித்து யாசிக்கும் நிலை உருவாகியிருப்பது வருந்தத்தக்கதாகும்.

ஒரு வருடத்திற்கு முன்பு இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் நுகர்வோர் பொருட்களில் இருந்த விலை பெரும்பாலும் இரட்டிப்புக்கும் மேலாகி விட்டது. ஆறுமாதம் முன்னர் 1350இலங்கை ரூபாய்க்கு விற்ற சமையல் எரிவாயு சிலிண்டர், இன்று 1900ரூபாய்! இந்தியாவிலும் இதே நிலை. அங்கு தற்போதைய சிலிண்டர் ஒன்றுக்கு ஏறக்குறைய 400 இந்திய ரூபாய்கள்.

மாபெரும் விற்பனை சந்தையான இந்தியப் பொருளாதாரத்தில் இத்தகைய விலையேற்றம் பெரும் தாக்கம் ஏற்படுத்தியுள்ளது. வளரும் நாடுகளில் மட்டுமல்ல வளர்ந்த நாடுகளிலும் நிலைமை சொல்லிக்கொள்கிறார் போலில்லை.

வரலாறு காணாத அளவுக்கு விலையேற்றம் ஏன்? அதுவும் குறிப்பாக உணவுப்பொருட்கள் மீது அதிக பாதிப்பு ஏற்பட்டது. எதனால்?காரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.


1. உணவுதானிய வகைகளைப் பயிரிட்ட விவசாயிகள் பலர் தற்போது குறைந்த முயற்சியில் அதிக பலன் ஈட்டும் உணவுவகை சாராத பணப்பயிர்கள் வசம் சாய்ந்து விட்டதால் உணவு வகைகள் உற்பத்தி அதளபாதாளத்திற்கு போய்விட்டது.
2. கூட்டாண்மை நிறுவனமாக (Corporate)உலகமே மாறிவிட்ட காரணத்தினால் அனைத்துத் துறைகளிலும் கால்பதித்துவிட்ட இத்துறை நிறுவனங்கள் உணவுத்துறையையும் விட்டு வைக்க வில்லை?! உணவுப் பொருட்களை வாங்கி கிடங்குகளில் பதுக்கி வைத்து பற்றாக்குறை வேளைகளில் கவர்ச்சிகர விளம்பரங்களுடன் சந்தையில் இறக்குகின்றன.
3. அமெரிக்கா உள்ளிட்ட மேலைநாடுகள் எரிசக்தி சார்ந்த திறன்களை மேம்படுத்த உணவுத்தானியங்கள் சார்ந்த பொருட்களைப் பயன்படுத்த தொடங்கி விட்டன. இதனால் தார் சாலையில் போக செவர்லட் கார்கள் இருக்க ஏழைகளின் வயிற்று சாலைகளில் எலிகள்தான் ஓடுகின்றன.
4. கச்சா எண்ணெய் விலையில் அவ்வப்போது நிகழும் விலையேற்றம் சுண்டக்காய் கால் பணம் சுமைகூலி முக்கால் பணம் எனும் நிலையை ஏற்படுத்தி விட்டது. இதனால் ஏற்கனவே அதிக உற்பத்தி விலை கொண்டிருக்கிற அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் போக்குவரத்து செலவுகளால் எட்டிப்பிடிக்க முடியாத ஏற்றத்துக்கு சென்று விட்டன.

இது தவிர இலங்கை போன்ற நாடுகளில் எந்நேரமும் தொடரும் யுத்த செலவுகளால் நாட்டின் பொருளாதாரம் இராணுவ செலவின்பால் சாய்ந்திருக்கிறது. எனவே உணவுப் பொருள் பற்றாக்குறை,விலையேற்றம் ஆகியன அன்றாட வாடிக்கையாகி விட்டன.

ஒரு தேசத்தின் மீது தொடுக்கப்படுகின்ற அந்நிய தாக்குதலுக்கு எவ்வித்திலும் சளைத்ததல்ல, இத்தகு விலைவாசி ஏற்றங்கள்! விலை நிர்ணயிக்கும் நிர்ணயலாளர்களின் மனைவிமார்கள் பொருள் வாங்க கடைக்கு செல்வதில்லை.எனவே அவர்தம் கணவன்மார்களுக்கு விலைவாசி உயர்வைக் குறித்து அவர்கள் காதில் போட்டு வைப்பதில்லை. குப்பனும் சுப்பனும் தான் தம் மனைவியரிடம் ஏச்சும் பேச்சும் கேட்க வேண்டும். ஆனால் அவர்களுக்கோ விலைவாசி உயர்வுக்கு சொல்லப்படும் பணவீக்கம்,தாராளமயமாக்கல் போன்ற வார்த்தைகளே தெரியாது. இந்த இக்கட்டான வேளைகளில் அரசாங்கங்கள் வழக்கம் போல் பண அச்சடிப்பு அதிகரித்தல், ரொக்க இருப்பு விகிதம், வட்டி விகிதங்களை அதிகரிப்பது - குறைப்பது போன்ற கண்ணாமூச்சி விளையாட்டைத்ததான் விளையாட முடியும். ஆனால் சாமான்யனின் வாய்க்கும் கைக்கும் இடையிலான மலை - மடு வித்தியாசத்தை புரிந்து நீக்கக்கூடிய வகையில் செயலாற்ற முடியாமல் தவிக்கின்றன.

சரி விலையேற்றக் கட்டுப்பாட்டுக்கான தீர்வு என்ன?

முதலில் எந்தவொன்றும் மனிதன் தானே உருவாக்கியவை அல்ல. ஏன், அவனே படைக்கப்பட்டவன் தானே! எனவே அனைத்துக்கும் உரிமையாளனாகிய - அதிபதியாகிய ஏகஇறைவனே இதற்கும் தீர்வு தர வல்லவன். ஆம்.!அவனால் வழங்கப்பட்ட இஸ்லாமிய நெறிமுறை இத்தகு பொருளாதார வாழ்வியல் பிரச்னைகளுக்கு பதட்டமற்ற மிகப்பெரும் தீர்வை முன் வைக்கின்றது. உலக தேவைகளின் குறைந்தபட்ச தீர்வுகளையும் குதர்க்கமின்றி கொடுக்கின்றது. ஆம்!! இஸ்லாம் எனும் அந்த வாழ்க்கை நெறி சமச்சீரான உணவுப்பரவல் முறையை முன்னிறுத்துகின்றது. உலகளாவிய பண்டமாற்று முறையின் உன்னத பயன்பாட்டை வலியுறுத்திப் பேசுகின்றது. உண்ணுங்கள்,பருகுங்கள்., ஆனால் வீண்விரயம் செய்யாதீர்கள்! என்று பேசி வீண்விரயத்தை விகாரமாக்கிக் காட்டுகின்றது.விவசாயம் முதல் பொருள் உற்பத்தி, கொள்முதல், விநியோகம்,விற்பனை ஆகிய எதுவொன்றிலும் எந்தவொரு ஏமாற்றுதலும் கள்ளத்தனமும் கூடாது என்று எச்சரிக்கின்றது.



அனைத்துக்கும் அச்சாணியாக ஒழுக்க மேம்பாடு தனிப்பட்ட ஆளுமை விஷயத்தில் மட்டுமல்ல, சமூக நிலை சார்ந்த இத்தகைய அத்தியாவசிய தேவைகளின் மீதும் தாக்கம் செலுத்த வேண்டும் - எனும் உன்னத கொள்கையை உலகுக்கு உணர்த்துகின்றது.இத்தகைய தீர்வுப்பாதையை பொருளாதார நிலைத்தன்மையின் வழித்தடமாய் மனித குலம் மேற்கொண்டால் விலைவாசி விண்ணைத் தொடும் பேச்சுக்கே இடமில்லை, மாறாக, மனித வாழ்வின் உயரிய மகாத்மியம் மட்டுமே விண்ணைத் தொடும் எனும் புளகாங்கிதத்துக்குக் குறைவே இல்லை.

ஆசிரியர்
amusavir@gmail.com

போதை ஒழிப்பு தினம்: ஜூன் 26

# போதைப் பாதாளத்தில்...!

எழுத்து

மு.அ. அப்துல் முஸவ்விர்



இன்பவழி தேடிப்போய் அவர்கள் சென்றடைந்து கொண்டது துன்ப உலகத்தை! தற்போது மீளாக் கவலையால் நூலாய் அவர்களது மேனி ஆகி வாளாய் கீறிக் கிழித்துக் கொண்டிருக்கிறது அவர்களது மனங்களை!! போதை உலகத்தின் பேதை போராட்டங்களில் சிக்குண்டு சிதறிப்போய், சிறிது சிறிதாய் மரண வரைவின் புள்ளிகளாய் ஆரம்பித்துக் கொண்டிருக்கின்றனர் போதை அடிமைகள். பணங்களைப் புரட்டுவதற்கு அவர்களது மனங்களை போதையிடம் அடகு வைக்கும் அவர்கள், இது தற்காலிகத் தீர்வு என்பதை மறந்து விட்டு நிரந்தர மரணத்தைத் தழுவிக் கொள்கின்றனர்.கொஞ்சம் கொஞ்சமாய் எல்லாவற்றையும் இழந்து கடைசியில் விரல் நுனி தொட்டு விலகிச் செல்கின்றது அனைத்துமே!!

எதையும் தாமதமின்றி, உடனுக்குடன் அடைந்துகொள்ள நாடும் இன்றைய தலைமுறையினரான இவர்களுக்கு வழிமுறைகள் பற்றி கவலையில்லை. அடைதல் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, பரந்து விரிந்த வாழ்வியல் வாவியை ஒரு குறுகிய சிற்றின்பக் குட்டைக்குள் அடைத்துக் கொண்டு செயல்படுகின்றார்கள். அதனால், ஆபத்துக்களும், என்றும் மீளவேமுடியா துன்பங்களும் வாழ்வு முடிகையில் வெளிப்பட ஆரம்பிக்கின்றது. அத்தகைய ஒரு சிற்றின்ப சிதறல் சக்தியாக இளைய சமூகம் ஆரத்தழுவியிருப்பது போதையை ... போதை வஸ்த்துகளை!

பிரபலங்கள், ரசிகர்களுக்கு தமது இசைவீரிய போதையை ஏற்ற நாடும் 'ராக்' இசைப் பாடகர்கள் போன்ற மேல்தட்டு வர்க்கத்தினர் மட்டுமே அடிமையாகியிருப்பதாகக் கருதப்பட்ட போதையின் பாதாளத்தில் நடுத்தர வர்க்கத்தினரும், சாதாரண பாதையோர பரதேசிகளும் கூட விழுந்து கிடப்பது சமூகத்தின் மாபெரும் வீழ்ச்சியை காட்டுகின்றது. சமீப காலங்களாக இந்தியா, இலங்கை போன்ற மூன்றாம் உலக வளரும் நாடுகளில் இந்த எச்சிலை எமனுக்கு சமூக அந்தஸ்து கிடைத்து வருவது அதிரவைக்கும் தகவல்!

வெள்ளைச் சட்டை வேந்தர்கள், மென்கட்டுமான மேதைகள், வணிக வல்லாளர்கள், பொருளாதாரப் புலிகள், அறிவியல் ஆசான்கள் ஆகியோர் விருந்துகளில் போதைப் பொருட்கள் பொழுதுபோக்கு எனும் பெயரில் ஆக்கிரமித்து வருகின்றன. குறிப்பாக, 25-35 வயதுக்குட்பட்ட, பணத்தில் புரளும் செல்வச் சீமான்களின் தறுதலைப் பிள்ளைகள் கூட்டம் மிகவும் அசாதாரணமாக போதைப் பொருட்களை தம்மோடு புழங்க வைத்துக் கொண்டிருக்கிறது.

## காரணம் என்ன?

மிக எளிதாக விட்டில் பூச்சிகள் போல் போதையிடம் வீழ்ந்துபோக என்னதான் காரணம்? இதனை இவ்வாறு நோக்க முடியும்.

ஒன்று: நாம் ஏற்கனவே கூறியதுபோல் மேல்தட்டு வர்க்கம் சமூக அந்தஸ்தாகக் கருதத் தொடங்கியிருப்பது! ஆளுமை அந்தஸ்துக்காக இப்பழக்கத்தை ஆரம்பித்து ... மனஅழுத்தத்தின் கோரப்பிடிக்கு தன்னை இழக்க இந்த 'போதை'யை போதி மரமாகப் கருதி அதன் நிழலில் (!) குளிர்காய தலைப்படுகின்றனர்.

இரண்டு: குடும்பத்துடனான தங்கள் உறவுகள் கடும் பாதிப்படைந்து மீளமுடியா துயரத்தில் ஆழ்ந்து விடுவதுதான்! இதனால் தனிமையின் கோரப்பிடியில் சிக்கி சின்னா பின்னமாகின்றார்கள். தனிமையிலிருந்து விடுபட நாடி ஒரு புதிய உலகத்தை தேடி அலையும்போது போதைப் பாதாளத்தின் கோரப்பிடிகள் அவர்களை ஆரத்தழுவிக் கொள்கின்றன. அதற்கும் மேலாக, இயந்திரத்தனமான வாழ்க்கை, ஜெட் வேகமெடுத்து பரவும் உலகமயமாக்கல், தாறுமாறாக எகிறும் பொருளாதார வளர்ச்சிநிலை ஆகியவற்றின் எதிர்மறை தாக்கங்களும் ஒரு மூன்றாம் முக்கிய காரணியாக நிற்கிறது. சிறு வயதில் பெரிய பணிகள், பிஞ்சுக்கரங்களில் பொறுப்புச்சுமைகள், சுருங்கிப் போன உலகில் - வேற்று கலாச்சார நாடுகளுக்கு பக்கத்து வீட்டுக்கு சென்று வருவதுபோல் அடிக்கடி பறப்பது, உப்பு பெறாத விஷயங்களுக்கெல்லாம் விருந்து படைக்கும் சீரழிவுக் கலாச்சாரம்! இத்தகைய அதிபயங்கர தாக்கங்களின் பரிபூரண நாசமே இந்த போதைக்கு சிவப்புக் கம்பளம் விரிக்கிறது.



வளர்நது விட்ட தங்கள் பிள்ளைகளின் சுதந்தரத்தில் தலையிடுவதை ஒரு இளக்காரமாகவே கருதும் பெற்றோரின் அலட்சியமும், பிள்ளைகளின் தான்தோன்றித்தனத்தை மேலும் வளர்க்கச் செய்கின்றது.

## போதையின் பயங்கர பாதகம்

அமெரிக்காவிலிருந்து தாய்லாந்து வரை அதிபயங்கர விளைவுகளைத் தரும் இந்த போதைப் பொருட்களின் பாதக புள்ளிவிவரங்கள் காண்போம். வழக்கம்போல், அதிவேக சுதந்தரத்தால் தறிகெட்டு போய்க் கொண்டிருக்கும் அமெரிக்க கலாச்சாரத்தில் போதைப் பொருட்களின் பயன்பாடு பற்றி சொல்லத் தேவையில்லை!

அடுத்து, ஐரோப்பிய நாடுகள். மேற்கத்திய கலாச்சாரம் ஊற்றெடுத்து ஓடும் இந்நாடுகளில் போதையும் அத்துடன் சேர்ந்து பெருக்கெடுத்து ஓடுகின்றது.

அடுத்து ஆப்பிரிக்க நாடுகள். எய்ட்ஸ் போன்ற உயிர்க்கொல்லி நோய்கள் இந்நாடுகளில் மிக அதிகமாகக் காணப்படுவதற்கு போதைப் பொருட்களின் பயன்பாடும் ஒரு முக்கிய காரணமாகும்.

அடுத்து ஆசிய நாடுகள்! இவை பெரும்பாலும் போதைப் பொருட்கள் உற்பத்தி, கடத்தல் இவற்றுக்கு அடுத்தபடியாக பயன்பாடு என்று அனைத்து போதைப் பிரிவு செயற்பாடுகளில் முழுவீச்சுடன் ஈடுபட்டு வருகின்றன.

உலக நாடுகளில் 1999-இல் 24% ஆக இருந்த கொக்கெய்ன் எனும் போதை வஸ்துவின் பயன்பாடு இன்று 45% ஆகியிருக்கின்றது. அதுபோல், ஹெராயின் எனும் வஸ்துவின் உபயோகம் 24% ஆக உயர்ந்திருக்கின்றது. 1999-இல் இதன் பயன்பாட்டு அளவு 1% மட்டுமே!

ஐக்கிய நாடுகள் சபையின் போதை மற்றும் குற்றவியல் தடுப்புப் பிரிவு தலைமை இயக்குநர் திரு. கோஸ்டா 'உலக மக்களில் 200 பேரில் ஒருவருடைய வாழ்வில் போதை வஸ்துக்களின் பாதிப்பு இருக்கின்றது" என்கிறார்.

போதைப் பொருட்கள் பயன்பாட்டின் முக்கிய கேந்திரமாக விளங்கும் தாய்லாந்து நாட்டில் போதையின் பாதிப்பால் ஏற்படும் கொலை, கற்பழிப்புக்கள் மிக அதிகம். ஏற்கனவே, பாலியல் சுதந்தர அமைப்பு முறையால் கடும் ஒழுக்கவீழ்ச்சிக்கு ஆளாகியிருக்கும் அந்நாடு போதையின் பிடியில் இறுகிப் போயிருக்கின்றது. இந்தியாவைப் பொறுத்தவரை அண்மையில் அதன் அதிமுக்கிய 24 நகரங்கள் மறறும் கிராமங்களில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி போதைப் பொருட்கள் பயன்படுத்துவோரில் 95% பேர் சொந்த ஊரிலேயே வசிப்பவர்கள். போதைப் பயனாளிகளில் 62% பேர் பணியில் இருப்பவர்கள் என்று மற்றொரு கணக்கெடுப்பு கூறுகின்றது.

அதிர்ச்சிகரமான இன்னொரு தகவல் என்னவென்றால், இவர்களில் பெரும்பாலோர் 21-40 வயதிலான ஆண்கள்! போதை மீட்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வந்தாலும் தீவிரபோதைப் பயனாளிகளில் 5% அளவினரிடத்தில் மட்டுமே அவை சென்றடைவதாக தெரிய வந்துள்ளது. (ஹர்ஷேத் விர்க், தி சொஸைட்டி, இந்தியா)

இதேபோல், சிறிய நாடாக இருப்பினும் கால் நூற்றாண்டாக தொடர்ந்து போர்ச்சூழலில் இயல்பு வாழ்க்கை நிலை பாதிக்கப்பட்டிருப்பதால், போதைப்பொருள் கடத்தல் இலங்கையை எளிதாக ஆட்கொண்டு இருக்கின்றது. இலங்கையின் சிறைச்சாலைகளில் ஏறக்குறைய 12000 பேர் போதைக் கடத்தலுக்காக தண்டனை அனுபவித்து வருகின்றார்கள்.

சீனா, மாலத்தீவுகள், கொரியா, இந்தோனேஷியா, மலேஷியா, நேபாளம், ஜப்பான் உள்ளிட்ட ஆசிய நாடுகள் முழுவதும் இந்த போதப்பொருள் பயன்பாடும், கடத்தலும் கொடி கட்டிப் பறக்கின்றது.

உலகின் மிக அதிக மக்கள்தொகை கொண்ட சீனாவில் போதைப்பொருள் பயண்படுத்துவோர் 800,000 பேரில் 600,000 பேர் ஹெராயினுக்கு அடிமையானவர்கள்.

மாலத்தீவின் போதைப் பயன்பாட்டாளர்களில் 20-25% பேர் ஊசி மூலம் போதையேற்றுகின்றார்கள். மொத்த போதைப் பொருள் பயன்பாட்டாளர்களில் 90% பேர் ஆண்கள். அவர்களில் 20% பேர் 20 வயதுக்கும் குறைந்த பருவவயது இளைஞர்-இளைஞிகள்! 2003-இல் மாலத்தீவில் இருந்த 8% போதைப்பொருள் பயபாடு மக்கள்தொகைக்கு இணையான வளர்ச்சி அடிப்படையில் எங்குமே இல்லாத அளவுக்கு 2006-இல் 29% ஆக உயர்ந்துவிட்டது.

குவைத் போன்ற வளைகுடா நாடுகளைப் பொறுத்தவரை போதைப் பொருள் கடத்தல், பயன்பாடு குறித்த சட்டங்கள் மிகக் கடுமையானவையாக இருப்பதால், அதன் தாக்கம் குறைவு. எனினும், வெளிநாட்டவர்கள் இப்பிராந்தியந்தில் அதிகம் வசிப்பதால் இதில் கிடைக்கும் அபரிமிதமான பணம், அவர்களை அச்சமின்றி ஈடுபட வைக்கின்றது. ஆனாலும் அரசாங்கங்கள் தமது இரும்புக்கரம் கொண்டு அடக்கி வருகின்றன!

## அச்சமில்லையா?

பெருமை அடிக்கும் அந்தஸ்த்துக்காகவும், போதை தரும் போக்கிரித்தனமான போதைக்காகவும் அது தரும் அதி பயங்கர பாதிப்புக்களை புறக்கணிக்கின்றனர் இந்த போதையர்கள். கல்லூரியிலிருந்து வெளியே வந்தவுடன் இரவுநேர பகுதி வேலைகளான பி.பி.ஓ.(மக்கள் தொடர்பு), மற்றும் மெடிகல் டிரான்ஸ்கிரிப்ட்னஸிட் (மருத்துவ அறிக்கை மொழியாக்கம்) போன்ற பணிகளில் ஈடுபடுவோர் தங்கள் பணிச்சுமையை மறக்க போதையை நாடுகிறார்கள். பொறுப்பை நிறைவேற்ற பணமே அவர்களுக்கு பிரதானமாகத் தெரிவதால் அதனை

ஈட்ட, தமது பணியின் சுமையை மறக்க போதையின் பாதிப்பை பெரிதாகக் கண்டுகொள்வதில்லை.

கடந்த நான்கு ஆண்டுகளில் குறிப்பிட்ட போதை வஸ்து ஒன்றை பயன்படுத்துவோர் எண்ணிக்கை இந்தியாவில் 300 முதல் 400 சதவீதம் வரை அதிகரித்திருப்பதாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. அதேபோல், மன அழுத்தம், குடும்பத்தினரிடமிருந்து அலட்சியப்போக்கு, காதல் தோல்விகள், மன இறுக்கம் என்று பட்டியல் நீள்கின்றது.

## சட்டம் என்ன சொல்கின்றது?

உலக நாடுகள் முழுவதும் தம்மிடையே ஒரு விஷயத்தில் ஒத்து கருத்து உடையவனாக இருக்கின்றன என்றால், அது போதை ஒழிப்பு விஷயத்தில்தான்! உலக சமூகத்தையே படுபாதாளத்தில் கொண்டுபோய் தள்ளிவிடும் இந்த போதை அரக்கனை கடும் சட்டம் கொண்டு ஒடுக்க கைகோர்த்துள்ளன அனைத்து நாடுகளும்!


பெரும்பாலான உலகநாடுகளில் போதைப் பொருட்களுடன் ஆதாரப்பூர்வமாக பிடிபட்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகின்றது. வளைகுடா நாடுகளில் குறிப்பாக ஸவூதி அரேபியா இதுவிஷயத்தில் தயவு தாட்சண்யம் காட்டுவதில்லை!

## தடுக்க... ஒழிக்க... தீர்வு என்ன?

உலகநாடுகள் கைகோர்த்து சட்டங்கள் போட்டு தடுக்கப் பார்த்தாலும் வருடந்தோறும் போதைப் பொருள்கள் பயன்பாடும், கடத்தலும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றனவே தவிர குறைவதாகத் தெரியவில்லை.“திருடராய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது” என்பதுபோல், போதையின் கடும் பாதிப்பையும், அதன் மீளமுடியா பேராபத்துக்களையும் உணர்ந்து போதைப் பயன்பாட்டாளர்கள் திருந்தாத வரை அதனை ஒழிப்பது கடினமே!

ஆனாலும், ஒரு வழியில் அதனை ஒழிக்கலாம். வாழ்வின் உன்னத அம்சத்தை, ஈடு-இணையில்லா தாத்பர்யத்தை, போற்றுதலுக்குரிய வழித்தடங்களை இன்றைய இளைய சமூகத்துக்கு விடியல்களின் செங்கீற்றுக் கதிர்களாய் தெளிவான அடிவானப்பரப்பு போல் வரைந்து காட்டினால், போதை பாதாளத்திலிருந்து மீண்டு நவவிடியலின் புதுஸ்பரிசத்தை உணர்ந்து கொள்வார்கள்,

இத்தகைய கொடுந்தேள் மானுட சிந்தனையை அடியோடு வேரறுக்க வேண்டியது நம் கடமை என்பதை உணர்ந்து, வாழ்வின் முக்கியத்தவத்தை மதிப்பார்கள். போதை விஷயத்தில் பொடுபோக்காக இருக்காமல், எவ்விதத்திலாவது அதற்கு போக்கு காட்டி தப்பிப்பார்கள். அத்தகைய வாழ்வியல் ஒளி எங்கிருந்து கிடைக்கும்? வாழ்க்கையின் அனைத்துத்துறைகள் தழுவிய சட்டங்கள் எதிலிருந்து பெற முடியும்?



போதைப் பொருள்கள் பயன்பாட்டால் மூளையில் ஏற்படும் பாதிப்பு சதவீதம்

அதற்குதான், இஸ்லாமிய நெறி வழிகாட்டுகின்றது. பொதுவாக, இளைய சமூகம் விரைவில் நிராசையடையக் கூடியது. அந்த நிராசைதான் அவர்களை போதை போன்ற வழிகேடுகளின் பக்கம் விரைவில் சாயச் செய்கின்றது. எனவே, அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்கப்பட வேண்டும். அதேவேளை, அவர்களின் வரம்பு மீறிய உணர்வுகளில் நம்மை இழந்துவிடக் கூடாது.

அவ்வாறே, தகுதிக்கு மீறிய பொறுப்பைத் தந்து மனஅழுத்தத்தில் அவர்களை தள்ளுவதிலிருந்தும் காத்துக்கொள்ள வேண்டும். மனஅழுத்தம், மோசமான மனநிலை, தான் எதற்கும் பயன்படாதவன் எனும் சுயவெறுப்பு ஆகியவற்றுக்கான காரணிகளை ஆராய்ந்து அவற்றிலிருந்து விடுபட வைக்க வேண்டும்.

> எதிலும் ஒரு கட்டுப்பாடும் எல்லையும் பேணப்பட வேண்டும். ஆரம்ப நிலைகளிலேயே வரம்புகள் பேணப்பட வேண்டும்.

எல்லாமே அதிகமாகக் கிடைப்பதால் வரும் பிரச்னைதான் இதற்கு பெரும்பாலும் காரணம் என்பதால், தங்களால் எதையும் சாதிக்க முடியும் என்று வெறியுடன் நடந்துகொண்டு, பின்னர் இயலாமற்போகும்போது, பொறுமை இழக்கின்றார்கள். போதை வஸ்துக்களை நாடுகின்றார்கள். வாழ்வையும் இழக்கின்றார்கள்.

எனவே, எதிலும் ஒரு கட்டுப்பாடும் எல்லையும் பேணப்பட வேண்டும். ஆரம்ப நிலைகளிலேயே வரம்புகள் பேணப்பட வேண்டும். இத்தகைய மனிதர்களிடம் உள்ள இருண்மையான அம்சங்கள் குறித்து மனம் திறந்து பேச வேண்டும். அவர்களின் நிராதரவான உணர்வைப் போக்க வேண்டும்.

அதேபோல், குடும்பங்களில் நிலவும் ஒருசார் நிலையும் அதாவது, குறிப்பிட்ட பிள்ளை மீது மட்டுமே கவனிப்பு மற்ற பிள்ளைகளை உடனே தனிமைப்படுத்தக்கூடியது. அதேபோல், ஒரேயடியாக அன்பைப் பொழிந்துவிட்டு பின்னர், அதற்கு நேர்மாற்றமாக புறக்கணிப்பும் விரக்தியின் விளிம்பில் கொண்டுபோய் நிறுத்தும்.

அதனால்தான், இஸ்லாத்தின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “......இறைவனுக்கு அஞ்சுவீராக! உங்கள் பிள்ளைகளுக்கு மத்தியில் நேர்மையாக நடந்துகொள்ளுங்கள்!”....
அறிவிப்பாளர்: நு.்.மான் இப்னு பஷீர் (ரலி) ஆதாரம்: புகாரி

மறுபுறம், இந்த போதைப்பொருள் வணிகத்தில் கிடைக்கும் அபரிமிதமான பணம், இளைய சமூகத்தை செல்வ போதையில் தள்ளுகின்றது. எனவே, வாழ்வின் ஆடம்பர ஆசைகளுக்காக எப்படியும் சம்பாதிக்கலாம் எனும் மனப்போக்கை கைவிட வேண்டும். அதற்கு வழிவகை தரக் கூடிய வாழ்வியல் அம்சத்தை ஆரத் தழுவவேண்டும்.

அத்தகையதொரு, நிம்மதியான வாழ்க்கை முறையை இஸ்லாம் எவ்வித பாதகமுமின்றி முன்வைக்கின்றது. வாழ்வின் விரக்தி தரும் விவகாரங்களை விரண்டோடச் செய்கின்றது. உடல் மற்றும் ஆன்ம அமைதிக்கான வழிமுறைகளை வார்த்தெடுத்து வழங்குகின்றது.


இளைஞர்களே! போதைப் பாதாளத்தின் இருண்ட குகையிலிருந்து வெளியே வாருங்கள்! உங்களுக்காக புதிய வாழ்க்கை நெறி தன் சுகந்த சிறகுகளை விரித்து அழகிய விடியலில் ஒளிக்கீற்றுக்களைப் பாய்ச்சிக் கொண்டிருக்கின்றது. ■





# இறைவன் தனித்தவனா...?





எழுத்து



என்.எம்.எம். ஹுஸைன்

**வானங்கள், பூமி மற்றும் பிரபஞ்சங்கள் அனைத்தினதும் தன்னிகரற்ற படைப்பாளன் அல்லாஹ் ஒருவனே! அவனே பிரபஞ்சங்கள் அனைத்துக்கும் சொந்தக்காரன்! அவன் ஏகன்! அவனுடைய செயல்களிலோ, பண்புகளிலோ, வல்லமைகளிலோ, ஆற்றல்களிலோ அல்லது அறிவு ஞானத்திலோ வானங்களிலும்** பூமியிலும் அவனுக்கு நிகராக எந்த ஒன்றும் கிடையாது!

இது பற்றி இறைமறை பின்வருமாறு கூறுகிறது :

*“(உலகத்தின்) எந்தப் பொருளும் அவனுக்கு ஒப்பானதாய் இல்லை, அவன் அனைத்தையும் செவியுறுபவனும் பார்ப்பவனும் ஆவான்! (அத் 42 : 11)*

அவனே திட்டமிடுபவன், உருவமைப்பவன், படைப்பாளன், பரிபாலிப்பவன், தன் படைப்பினங்களின் தேவைகளை நிறைவேற்றுபவன், அவனுக்கு யாரிடத்திலும் எந்தத் தேவையும் கிடையாது! எந்த விதமான குறைபாடுகளுக்கும் அப்பாற்பட்டவன், தூய்மையானவன்!

உண்மையில் தெளிந்த சிந்தனையுடன் இவ்வுலகை நோக்குகின்ற ஒரு மனிதன் இவற்றில் காணப்படுகின்ற சிறிய பெரிய அனைத்துப் படைப்பினங்களிலும் மிக நுணுக்கமான திட்டமிடலையும், செம்மையான படைப்பாற்றலையும், நேர்த்தியான ஒழுங்கமைப்பையும், சீரான நிர்வாகத்தையும் கண்டுகொள்வான்!

இந்தத் திட்டமிடலும், ஒழுங்கமைப்பும், நிர்வாகமும் பலபேருக்கு மத்தியில் பங்கு போடப்பட்டிருந்தால் நிச்சயமாக இப்பிரபஞ்சத்தில் ஒழுங்கீனமும், குழப்பங்களும், சீர்கேடுகளும், அழிவுகளும் தோன்றியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.சூரியன் உதித்து மறைவதில் குழப்பம் ஏற்பட்டிருக்கும்! இரவு பகலின் மாற்றத்தில் தடுமாற்றம் தோன்றியிருக்கும்! காற்று வீசுவதில் குளறுபடிகள் காணப்படும்!(பார்க்க: திருக் குர்ஆன் 21 : 22)

எனவே, எந்த இறைவனைத்தவிர வேறு இறைவன் இல்லையோ அந்த இறைவனுக்கே எல்லோரும் எல்லாப் படைப்பினங்களும் அடிமைகள். அவனுக்கு மட்டுமே அவர்கள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். பகுத்தறிவு வழங்கப்படாத எல்லாப் படைப்பினங்களும் அந்த ஏகஇறைவனின் முழுக் கட்டுப்பாட்டிலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன. பகுத்தறிவு படைத்த மனிதன் அதிலிருந்து மாற்றமாக இருப்பது அவனது பகுத்தறிவுக்கு அழகு சேர்க்கக்கூடியதா, என்ன?

கதிரவன் உதித்து மறைவதும், காற்று வீசுவதும், காலம் மாறுவதும், மழை பொழிவதும், ஆக்கமும் அழிவும், பிறப்பும் இறப்பும், ஏன் மரத்திலிருந்து ஓர் காய்ந்த இலை உதிர்வதாக இருப்பினும் அவன் கட்டளைக்கு கட்டுப்பட்டே நடைபெறுகின்றது! அவை அணுவளவும் இறைவனின் கட்டளைக்கு மாறு செய்வதில்லை!

இறைமறை பின்வருமாறு குறிப்பிடுகிறது :

*...பூமிக்குள் செல்பவற்றையும், அதிலிருந்து வெளியேறுகின்றவற்றையும், வானத்திலிருந்து இறங்குகின்றவற்றையும், அதில் ஏறுகின்றவற்றையும் அவன் அறிகிறான். நீங்கள் எங்கிருப்பினும் அவன் உங்களுடனிருக்கிறான். மேலும், நீங்கள் செய்யும் செயல்களையெல்லாம் அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவனே வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சிக்கு உரிமையாளன். மேலும், அனைத்து விவகாரங்களும் தீர்ப்புக்காக அவனிடமே விடப்படுகின்றன. அவனே இரவைப் பகலிலும், பகலை இரவிலும் நுழைக்கின்றான்.மேலும்,நெஞ்சங்களில் இருக்கும் இரகசியத்தையும் அவன் நன்கறிகிறான்! (57 : 1- 6)*

ஆனால் விந்தை என்னவென்றால், பகுத்தறிவு வழங்கப்பட்ட மனிதன் மாத்திரம் படைத்த இறைவனுக்கு மாறு செய்யக் கூடியவனாக இருக்கிறான்! அவனுக்கு இணைதுணைகளை ஏற்படுத்துகிறான்! இது மிகப்பெரும் தவறும் அறியாமையுமாகும்.

முழுக் கட்டுப்பாட்டுக்கும் வணக்கத்துக்கும் உரியவன் படைப்பாளனாகிய ஏக இறைவன் மட்டுமே என்பதை புரிந்து அந்த இறைவனுக்கு மட்டுமே கட்டுப்பட்டு நடக்க வேண்டியது மனிதனின் பூவுலகக் கடமையாகும்.

ஏனெனில் மரணத்தின் பின் ஒவ்வொரு மனிதனும் அந்த இறைவனிடமே மீண்டும் கொண்டு செல்லப்பட இருக்கிறான் எனும் உண்மையை இறைமறை மிகத் தெளிவாக குறிப்பிட்டுக்காட்டுகிறது :

““வானங்களிலும், பூமியிலும் உள்ள அனைவரும் அடிமைகளாய் கருணைமிக்க இறைவனின் திருமுன் வரத்தான் போகின்றனர். அவன் அவர்கள் அனைவரையும் சூழ்ந்துகொண்டும் இருக்கிறான். மேலும், அவர்களைக் கணக்கிட்டும் வைத்துள்ளான். மறுமை நாளில் இவர்கள் எல்லோரும் தனித்தனியாக அவனது திருமுன் வருவார்கள்”

(திருக் குர்ஆன் 19:93-95)


ஆகவே மறுமை நாளில் இறை நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுமுன் எம்மை நாமே ஒருகணம் சுயவிசாரணை செய்துகொள்வோம். ■

மனித அகங்களுடன்

# அளவளாவும் அல்குர்ஆன்

## -பூரண வாழ்க்கைத் திட்டமாக..!

திருக்குர்ஆன் பேசுகிறது: 3



நான் என்னோடு எண்ணற்ற விஷயங்களை சுமந்துள்ளேன். வானம்-பூமி, சூரியன்-சந்திரன்,இரவு-பகல், பிறப்பு-இறப்பு, உலகம்-மறுமை, வாழ்வு-சாவு, ஆண்-பெண், சுவனம்-நரகம், உறவுகள், வணிகம். அரசியல், பொருளாதாரம்

எழுத்து



.:பைஸல் முஹம்மத்

அலசி உங்களுக்குப் பயன்படத் தந்திருக்கின்றேன்.

நான் பெரும்பாலும் விளிப்பது... மனிதர்களை நோக்கித்தானே தவிர, எந்தவொரு குறிப்பிட்ட சமூகத்தினரையோ, கூட்டத்தினரையோ நோக்கி அல்ல!

மனிதனுடைய கொள்கை, நடத்தை, அகவாழ்வு, புறவாழ்வு, தனிநபர் வாழ்க்கை, சமூகவாழ்வு, தேசியம், சர்வதேசம் என்று அனைத்தையும் குறித்து ஆக்கபூர்வ நடைமுறைகளை அலசித் தருகின்றேன். சுருங்கக்கூறின், நான் வாழ்வியல் அமைப்பின் உன்னத கலங்கரை விளக்காகவும், வெறும் அழகுபடுத்த அல்லாமல், அமல்படுத்தப்பட வேண்டிய சட்டநெறியாகவும் அருளப்பட்டேன். எனக்கு முன்னர் பல வேதங்களும் ஆகமங்களும் பல்வேறுவகை வாழ்க்கை அம்சங்களின் உன்னத வெளிப்பாடுகளை, பின்பற்றுதல்களை வழங்கியிருந்தாலும் அவை அந்தந்த காலகட்டத்து சமூக மக்களின் வாழ்வோடு மட்டும் இயைந்தே பெரும்பாலும் இருந்தன. உதாரணத்துக்கு மூஸா (அலை) அவ்களின் சமூக மக்களான இஸ்ராயீலின் வழித்தோன்றல்கள் நன்றிகொன்றவர்களாக இருந்ததினால் அவர்களுக்கு ஏற்றவாறு தவ்ராத்தின் கட்டளைகள் அமைந்தன.



ஆனால், நானோ அனைத்து சமூக மக்களுக்கும் ஓர் நல்லுரையாக வந்துள்ளேன். எனது ஒவ்வொரு அததியாயமும் இஸ்லாமிய இயக்கம் செயல்பட்டபோது ஏதாவதொரு குறிப்பிட்ட கட்டத்தில் ஏற்பட்ட சிறப்புச்சூழ்நிலையை முன்வைத்து அருளப்பட்டதாகும். அதற்குரிய ஓர் குறிப்பிட்ட பின்னணி இருந்தது. அக்கட்டத்தின் சிறப்புச் சூழ்நிலைகள் அந்த வசனங்கள் அருளப்பட வேண்டுமென்ற நிர்ப்பந்த நிலையை உண்டுபண்ணின. நான் அருளப்பட்ட ஆரம்பக்கட்டத்திலிருந்து முழுமையானது வரை எந்தவொரு நிலையிலும் மனிதர்களின் பிரச்னைகள், தேவைகள் குறித்து அறிவுரைகள் நல்குவதிலிருந்து நான் பாராமுகமாய் இருந்ததில்லை! அவைகளுக்கு தீர்வுகள் தருவதில் அலட்சியம் காட்டியதில்லை.

ஓ! மனிதர்களே!! பிரபஞ்சத்தின் உண்மையான ஒரே ஆட்சியாளனும், உங்களை மனிதப்படைப்பாக மிக அழகிய முறையில் படைத்தவனும், இறுதித்தீர்ப்பு நாளின் அதிபதியும் ஆகிய அந்த ஏகஇறைவனுக்கு மட்டுமே அடிபணியுங்கள் - இதுதான் நான் உங்களிடம் கோருவது! இதற்குரிய வழிமுறைகளைப் பின்பற்ற இறுதிவான்மறை எனும் முறையில் என்னை மட்டுமே பின்பற்றுங்கள். நிச்சயமாக நீங்கள் திசைதிருப்பப்பட மாட்டீர்கள். என்னை ஏற்றுக்கொள்வதற்கும் என்னைப் பற்றி ஆராய்ந்து சிந்திப்பதற்கும், நான் உண்மையான இறைவேதமா, இல்லையா என அறிவதற்கும் எனக்குள் இருக்கும் எண்ணற்ற புதினங்களை அறிவது அவசியம்.

எனவே, எனக்குள் உள்ள சில விஷயங்களை, இறைவனின் அற்புதப் படைப்பாகிய - மனிதர்களாகிய உங்களுக்குத் தருகின்றேன். அதனை தவறாமல் படியுங்கள். அதனை செயல்படுத்தும் வழிமுறைகளையும் நான் காட்டித் தருவேன், ஏகறைவன் நாடினால்...!

*அடுத்த இதழில் சந்திப்போம்,ஏகறைவன் நாடினால்...!*





# சிந்தனைப் பாதையின் சீர்மிகு வழித்தடங்கள்

*மார்க்க விழுமியங்கள்: 2*

இஸ்லாத்தின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் அழைப்பு விடுத்த அறிவுரைகள் என்ன? அந்த அறிவுரைகளின் தாக்கம் மனிதகுலத்தின் சீர்மிகு சிந்தனை மாற்றத்துக்கு கட்டியம் கூறுவதாக அமைந்தது எப்படி?



அஷ்ஷேக் முஹம்மத் -அல்- தப்தபாஈ

அப்மு

அதிமுக்கிய அம்சமாக அந்த அறிவுரைகளின் முழுமுதற் பயனாக மனிதகுலம் பெற்றது இதனைத்தான்:- தீமைகளின் புயலிலே சிக்கி சிண்ணாபின்னமாகிக் கொண்டிருந்த மனித இனத்துக்கு நன்மை எனும் கவிஞ்சோலையை அது ஈட்டித்தந்தது. நாளொரு பண்கும் பொழுதொரு புசலுமாக கழிந்த அவர்தம் வாழ்வின் வேறுபாட்டு விதர்பங்களை இருந்த இடம் தெரியாமல் ஒழித்தது. மனித சமூகத்தில் ஆணிவேராக பொதிந்திருநக்கு வேண்டிய நீதி, நேர்மை, நியாயம், சமத்துவம் போனற சமூக மதிப்புகக்களை அறிவுறுத்தியது. இதன் மிகப்பெரும் ஆக்கபூர்வ விளைவாக நீங்கா ஒளியை ... நேர்வழியை... நோக்கி ... மனிதகுலம் தன் கவனத்தைத் திருப்ப ஆரம்பித்தது.

அடுத்து முக்கிய அம்சம்: இஸ்லாமிய ஒளி விளக்கு எவ்வித சாதி அடிப்படையையும் சார்ந்ததாக ஏற்றி வைக்கப்படவில்லை. மாறாக, ஒரே ஒரு இறைவன் மட்டுமே படைப்பாளன் ஆவான். அவனால் படைக்கப்பட்ட மனிதர்கள் அனைவரும் சமமானவார்கள். மனிதபடைப்பு எனும் அழகிய விளைநிலைத்தில் கருப்பர் - வெள்ளையர், வறியவர்-செல்வந்தர், உயர்ந்தோர் - தாழ்ந்தோர் எனும் வேறுபாட்டுக் களைகள் கிடையாது. மாறாக, இறைவனுக்கு அடிபணிதல், இறையச்சம் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே அவர்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வு இருக்கும்.



பெண்ணினத்தை மதித்து நடக்கும்படி இஸ்லாம் அழைப்பு விடுக்கின்றது. அதுமட்டுமல்ல, ஆண்களுக்கு எந்தளவு முக்கியத்துவம் தரப்படுகின்றதோ அதே அளவு முக்கியத்துவமும் கண்ணியமும் பெண்களுக்கு வழங்கி அவர்தம் மதிப்பை கூட்டுகிறது இஸ்லாம்.

குடும்ப அமைப்பின் தாத்பரிய பரிணாமங்களை இஸ்லாம் அழகிய முன்வரைவாக வைத்தது. கணவன் - மனைவி அவர்கள் மூலமாக சந்ததி செழிக்க அழகிய பிள்ளைகள் என்று கட்டுக்கோப்பான நேரிய வாழ்க்கை முறையை விளக்கியது.

விபச்சாரத்தை விலக்கி வைத்து, திருமண வாழ்க்கை ஒப்பந்தத்தை ஆகுமாக்கியது. ஒருபுறம் கணவன் தனது மனைவியரை நல்ல முறையில் நடத்த ஆணையிட்டு மறுபுறம் மனைவியரும் தமது கணவரை மதித்து நடக்கக் கட்டளையிட்டது. அவனது இல்லத்தைப் பராமரிக்கும் கடமையையும் வழங்கியது. பெரியோர் சிறியோர் மத்தியிலும் மிக உன்னத உறவுமுறைகள் செழித்தோங்கவும் இஸ்லாம் வழிவகுக்கிறது. குறிப்பாக, முதியோர்களின் வயோதிக காலத்தில் அவர்களை பாதுகாத்தல், உரிய வசதிகள் செய்தல், கண்ணியத்துடனும் அன்புப்-பரிவுடனும் பழகுதல் ஆகியவற்றை ஊக்குவித்து பெரியோர்க்கு அளிக்க உன்னத மரியாதையை அடையாளம் காட்டுகிறது.

சிறுவயதில் அவர்கள் நம்மீது காட்டிய அன்புக்கும் கரிசனத்துக்கும் நாம் காட்ட வேண்டிய கடமையான மரியாதையாக இந்த பொறுப்பை இளையோரிடம் சுமத்தியிருக்கிறது.

*அடுத்த இதழில், ஏகறைவன் நாடினால்...!*

# அமைதியளிக்கும் உறக்கத்தை அளித்தவன் யார்?

சென்ற முன் இதழ் தொடர்ச்சி


உர்தூ மூலம்
மௌலானா ஸையித் அபுல் அ.்.லா மௌதூதி





தமிழாக்கம்
மௌலவி அ.குத்புதீன் அஹ்மத் பாகவி
மௌலவி அ.அப்துர் ரவூ.்.ப் பாகவி


6. நாம் பூமியை விரிப்பாக்கவில்லையா?[4]

7. மேலும், மலைகளை முளைகளாக ஊன்றி வைக்கவில்லையா?[5]

8. மேலும், உங்களை (ஆண் - பெண் எனும்) இணைகளாக நாம் படைக்கவில்லையா?[6]

9. மேலும் உங்கள் உறக்கத்தை அமைதியளிக்கக் கூடியதாய் நாம் ஆக்கவில்லையா?[7]

10. மேலும், நாம் இரவை மூடிக் கொள்ளக் கூடியதாய் ஆக்கவில்லையா?

11. மேலும், நாம் பகலை வாழ்க்கைத் தேவைகளைத் தேடிடும் நேரமாக்கவில்லையா?[8]

12. மேலும், உங்களுக்கு மேலே உறுதியான ஏழு வானங்களை நாம் அமைக்கவில்லையா?[9]

---

4. அதாவது அமைதியான தங்குமிடமாக பூமியைப் படைத்திருப்பது, அந்தப் படைத்த ஏகனின் வலிமையையும், நுண்ணறிவையும் எடுத்துரைத்துக் கொண்டேயிருக்கின்றது.

5. பூமியின் மீது மலைகள் ஊன்றப்பட்டிருப்பதைக் கவனித்தால், அதில் பல நுட்பமான விவேகங்கள் பொதிந்திருப்பது புலனாகும்.

6. ஆண், பெண் இணையாகப் படைக்கப்பட்டிருப்பது மாபெரும் நுண்ணறிவைக் கொண்ட விஷயமாக உள்ளது.

7. நுண்ணறிவு மிக்க படைப்பாளனின் அருந்திறனைப் பறைசாற்றும் அற்புதமான சான்றுகளில் ஒன்றாக தூக்கம் திகழ்கின்றது. பல மணி நேரங்கள் மனிதன் உழைத்ததற்குப் பின், புதிய தெம்பையும், உற்சாகத்தையும் பெற்றுக்கொள்வதற்காக சில மணி நேரங்கள் அவன் ஓய்வு எடுத்துக்கொள்ள இந்தத் தூக்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.


8. நீங்கள் இரவை நிம்மதியாகக் கழிக்க இருளையும் தூக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றோம். மேலும், நீங்கள் உங்கள் வாழ்வுக்காக ஓடி ஆட மிகவும் வெளிச்சமயமானதாக ஆக்கியிருக்கின்றோம். இந்த மகத்தான ஏற்பாடு ஒரு விவேகியின் நுண்ணறிவு இல்லாமல் உருவாகியிருக்காது.

9. இந்த வானத்தின் எல்லைகள் மிகவும் உறுதியானவை. அவற்றில் சற்றும் மாறுதல் ஏற்படுவதில்லை. இந்த எல்லைகளை மீறி, கோளங்களும் நட்சத்திரங்களும் ஒன்றோடு ஒன்று மோதுவதுமில்லை, பூமியின் மீது வந்து விழுவதுமில்லை!


வசனங்கள் மற்றும் தெளிவுரை ஒரு இதழ்விட்டு மறுஇதழில் தொடரும்
ஏகஇறைவன் நாடினால்..!



எழுத்து


மௌலானா
ஸையித் அபுல் அ.்.லா
மௌதூதி


# துன்பத்தில் கரம் நீட்டும் இறைவனை இன்பத்தில் மறக்கலாமா?


நூல்
நபிகளார் வரைந்த கோடுகளில் மனித வாழ்வு


இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்ராயீலின் வழித்தோன்றல்கள் உடைய காலத்தில் நடந்த ஒரு சம்பவத்தைக் கூறினார்கள். இறைவன் மூன்று மனிதர்களை சோதிக்க நாடினான். அதில் ஒருவர் குஷ்டரோகி, இரண்டாமவர் வழுக்கைத்தலையர், மூன்றாமவர் குருடர்.

ஒரு வானவரை மனித உருவில் அவர்களிடம் இறைவன் அனுப்பி வைத்தான். அவர் அந்த மனிதர்களை ஒவ்வொருவராகச் சந்தித்து, "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

குஷ்டரோகி சொன்னார்: "எனக்கு அழகான தோற்றமும் நல்ல பார்வையான உடலும் வேண்டும்!" வானவர் அவரை வருடிவிட்டார். அவரது குஷ்டரோகம் நீங்கியது. அழகான உருவை அவர் பெற்றார். "வேறு என்ன பொருள் வேண்டும்?" என அந்த வானவர் கேட்டார். "எனக்கு ஓர் ஒட்டகம் வேண்டும்" என்று அந்த மனிதர் சொன்னார். பத்து மாத சூல் ஒட்டகையை அவருக்குப் பரிசாக அளித்துவிட்டு, "அல்லாஹ் உங்களுக்கு இதிலே அபிவிருத்தியை ஏற்படுத்தட்டும்" என்று பிரார்த்திவிட்டுப் போய்விட்டார்.



அடுத்து, வழுக்கைத்தலையரிடம் வந்து "உங்களுடைய விருப்பம் என்ன?" என்று கேட்டார். "மக்கள் என்னைப் பார்த்து பரிகசிக்கின்ற இந்த வழுக்கைத்தலை நீங்கி, அழகான கேசம் எனக்கு வேண்டும்?" என்றார். வானவர் அவருடைய தலையை வருடிவிட்டபோது அவரது வழுக்கை நீங்கி அழகிய கேசம் உண்டானது. "உங்களுக்கு என்ன பொருள் வேண்டும்?" என்று வானவர் கேட்டார். எனக்கு ஒரு மாடு வேண்டும் என்று அவர் சொன்னார். ஒரு கருத்தரித்த மாட்டை அவருக்கு வழங்கிவிட்டு "அல்லாஹ் இதிலே உங்களுக்கு அபிவிருத்தி செய்யட்டும்" என்று சொல்லிவிட்டு போனார்.

குருடரிடம் போய்க் கேட்டபோது, "எனக்கு கண்பார்வை வரவேண்டுமே!"என்றார். "என்ன பொருள் வேண்டும்?"என்று கேட்க, "ஒரு ஆடு இருந்தால் வளர்த்துக்கொள்வேன்"என்றார். அவருக்கு ஒரு கருத்தரித்த ஆட்டைக் கொடுத்துவிட்டு பார்வையையும் திருப்பிக் கொடுத்துவிட்டுப் போய் விட்டார்.

சிறிது காலத்திற்குப் பின்னால் ஒரு பெரிய மந்தையாக ஆடும், மாடும், ஒட்டகையும் ஆகிவிட்டன. பின்னர் அதே வானவர் மனித உருவத்தில் அந்த மனிதர்களிடம் வந்து,' நான் ஒரு பிரயாணி, என்னுடைய பிரயாணத்தில் சொத்து சுகங்கள், பொருள்கள் எல்லாவற்றையும் இழந்துவிட்டேன். நான் என்னுடைய இடம் போய்ச் சேரும் வரைக்கும் எனக்கு ஓர் உதவி செய்யுங்கள்: உங்களுடைய ஒட்டகைகளில் ஒன்றை தாருங்கள்" என்று கேட்டார். அதற்கு அவர் சொன்னார்: "எனக்கு நிறைய பொறுப்புக்கள் இருக்கின்றன. எனக்கு எவ்வளவோ செலவு செய்ய வேண்டியிருக்கிறது: அதனால் என்னால் தரமுடியாது" என்று கூறிவிட்டார். அப்போது அந்த வானவர், "நீ ஒரு காலத்திலே எப்படி இருந்தாய் என்பது எனக்கு ஞாபகமிருக்கிறது. அந்த ஏகஇறைவன்தான் உனக்கு இவ்வாறான அருள்களைத் தந்தான் என்பதையும் ஞாபகப்படுத்துகிறேன். எனவே இதுபற்றி நீ சிந்திக்கக்கூடாதா?" என்று வினவினார். அதற்கு அவன், "நான் பரம்பரை பரம்பரையாக பெற்று வந்த சொத்து இது!" என்று வாதாடினான். அந்த வானவர் அவன் பழைய நிலைக்கு மாறவேண்டும் என்று சாபமிட்டார். அந்த மனிதன் பழைய நிலைக்கு திரும்பிவிட்டான்.

அதேபோன்று, அடுத்த மனிதனிடம் வந்து கேட்டபோதும் அவனிடமும் அதே பதில்தான், அதே நிலைதான்! அவனுக்கும் சாபம் கிடைத்தது. மூன்றாவது மனிதனிடம் வந்து கேட்டபோது அந்த மனிதன், 'நீங்கள் விரும்பியதெல்லாம் எடுத்துக் கொண்டு போகலாம். நீங்கள் எதை எடுத்தீர்கள், எதை விட்டீர்கள் என்று நான் அலட்டிக் கொள்ளப்பொவதில்லை" என்றார். அப்போது, 'எனக்கு எதுவும் தேவையில்லை, அல்லாஹ் உங்களை சோதிப்பதற்காகத்தான் என்னை அனுப்பினான்:" என்று அந்த மூன்று பேரின் வரலாற்றையும் அந்த வானவர் சொல்லிவிட்டுப் போனார்.

இறைவன் மூவர் விஷயத்தில் ஓர் உதாரணத்தைக் காட்டினாலும், எல்லோருடைய வாழ்க்கைக்கும் பொதுவான ஒரு படிப்பினையை அதிலே வைத்திருக்கின்றான். துன்பங்களின்போது அல்லாஹ்விடம் கரம் ஏந்தும் மனிதன், தன்னுடைய வாழ்க்கையில் ஓர் இன்பம் வரும்போது அவனை மறந்துபோவதால் அல்லாஹ்வைப் பற்றிய சிந்தனை அவனிடம் இல்லாமலே போய்விடுகின்றது.

எனவே, இறைவனுடைய இந்த அவதானம், அதாவது அவன் பார்க்கின்றான், அவன் தருகின்றான். அவன் ஓர் எதிர்காலத்தை வைத்திருக்கின்றான், அதுபோல கடந்த காலத்தில் ஒரு வாழ்க்கையைத் தந்தவனும் அவன்தான் போன்ற அவதானங்களும், அல்லாஹ்விடம் அவன் மன்றாடிக் கேட்டவை, அல்லாஹ் அவனுக்கு உதவி செய்தவை, அவனுடைய வாழ்க்கைப் பிரச்னையை தீர்த்து வைத்தமை இவ்வாறு கடந்த காலத்தைப் பற்றிய அவதானங்களை கவனத்திலே வைத்திருப்பதும் இறைவனுடைய கண்காணிப்பில் சாரும். அந்தப் பண்பு ஒரு இறைநம்பிக்கையாளனுக்கு மிக அவசியமானது என்பதை மேற்குறிப்பிட்ட மூவரின் சம்பவம் எமக்கு உணர்த்துகின்றது! ■


எழுத்து





ரஷீத்
ஹஜ்ஜுல் அக்பர்

*மாதராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா..!*

# கல்விச் சாலையின் இலட்சியக் குயில்!



இறைவனின் அற்புதப்படைப்புக்களில் மென் படைப்பு. தாய்மையை சுமக்கும் உன்னதசன்மானம்! இயற்கை தரும் ஒளிகள் அவள் மொழிகள். பூமியொத்த பொறுமை, ஆழி கடந்த அன்பு. அவளின் அறிவுச் சேமிப்புக்கள் இதிகாசத்தில் விலை மதிப்பற்ற விகிதங்கள்.!!இஸ்லாமிய கண்ணோட்டத்தில் எல்லா உரிமைகளையும் போராடாது வென்றெடுத்து, வெற்றியீட்டிய தங்கக்கோபுர கலசம் அவள்!!!

சங்க காலங்களிலும் யாப்பிலக்கியங்களிலும் பெண்ணின் உரிமை உருவம், உண்மை வடிவம் சிதைக்கப்பட்டதோடு அல்லாமல் இன்னபிற பல மதங்கள் கூட அவளை இழிவாக்கி, ஈனப்பிறவியாக்கி, இம்சைகளுக்குள்ளாக்கி, இதுவரையுமே இச்சை நீக்கியாகவே கருதி வருகின்றது. அதனால் இற்றை வரை நீதி வேண்டி அடிக்கடி வீதிக்கும் வரும் அவள், ஆட்சியதிகாரம் முதல் ஆன்மிகம் வரை திராவக வீச்சுக்கள் எனும் வன்மையில் துவங்கி வல்லுறவு வக்கிரம ஆக்கிரமிப்புக்கள் எனும் திண்மை வரை அவளின் உணர்வுத்துடிப்புக்கள் கேட்பாரற்று, எத்தனையோ செவிகளைக் கடந்து கொண்டிருப்பது உலகறிந்த உண்மை......இந்த இரு வகைப் பெண்களும் இரு வகையான பெண்களின் மதிப்பீடுகளை கூறுபோட்டுக் காட்டுகின்றமை வெள்ளிடை மலை.

மாறாக, தெளிந்த அறிவு நீரூற்றுக்களில் நீரருந்தி அதை பெண் சமுதாயத்திற்குப் பாய்ச்சிக்கொண்டிருக்கும்ஒரு பெண்ணான இவர் கல்விச்சாலைகளிலேயே இன்னும், நித்தமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். ஆம்.... ஸைனப் அஷ்ரி, அவர் எகிப்தியத்தில் பிறத்து கனேடிய தேசியம் பெற்றவர். தற்போது குவைத்திய மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும், இவர் அனுபவமும் தன்னம்பிக்கையும் தன்னகத்தே உரித்தாக்கிய ஒரு அறிவுரையாளர், சமூக சிந்தனையாளர். மேலும் கூறினால் நற்பாதை காட்டும் நல்திசைக் காட்டி! தனது தாய்நாடான எகிப்தில் மட்டுமல்லாது, கனடாமற்றும் குவைத்திலும் கல்வி பயின்ற இவர், Our Deeds And Sincerity, The Perfect Behaviour, Blessed Land ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.1994இல் IPC இஸ்லாமிய நிலையத்தில் பாதம் பதித்த இவர் இன்று வரை சேவையாற்றிக் கொண்டிருப்பதுடன் 100க்கும் மேற்பட்ட பயிற்சிக் களங்களை திறம்பட வெற்றிகரமாக நடத்திக்காட்டி இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறார். அவற்றின் மைல்கற்களாக முஸ்லிமல்லாதோருக்கு இஸ்லாமிய அழைப்புப் பணி, இஸ்லாத்தில் பெண்ணுரிமை, திருக்குர்ஆன் விளக்கம், திருக்குர்ஆன் ஓதுகலை, இன்னும் பலவற்றைக் குறிப்பிடலாம்.

மதங்களுக்கிடையிலான ஒப்பு நோக்கு, இஸ்லாம் பற்றிய கண்ணோட்டங்கள் போன்றவையும் அவருடைய செயற்களப் பாடங்களில் அடங்கும். ஏராளமான நாட்டவர்கள் இதிலிருந்து பெரிய பயன்களை பெற்று வருவதுடன் அவர் காட்டிய வழித்தடங்களை கிஞ்சிற்றும் பிசகாமல் பின்பற்றி வருகின்றனர் அநேகர். இதனால் திறமைமிக்க ஆசிரியர்கள், இஸ்லாமிய அழைப்புப் பணியாற்றுவோர், சிந்தனை சிற்பியர், பொதுநல சேவகர்கள் போன்ற பலரும் பரிணமித்துக் கொண்டிருக்கின்றனர் நம்மத்தியில்! IPC பெற்ற நல்முத்துக்களில் ஒன்றாக போற்றப்படும் இவர் நிலையத்தைத் தேடி அறிவுத் தாகத்துடன் வரும் பலரினதும் இதயம் வென்றவராவர். அவருக்குப் பின்னால் இலட்சியமிகு சமுதாயமொன்றை உருவாக்கும் தகைமை கொண்ட பெண்கள் உணர்வுப்பூர்வமாக உருவாகுவது திண்ணமே!

மேலும் ரமளான் போன்ற புனித மாதங்களிலும் அவருடைய அலங்காரமிகு அழகு சிறப்புரைகள் அம்மாதத்துக்கு மேலும் மெருகூட்டும்!இந்த வயதிலும் இத்துணை சுறுசுறுப்பா என வியக்க வைக்கும் இந்த நங்கை, மனதால் என்றும் இளமையான வேகத்துடனும் சிரித்த முகத்துடனும் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

இஸ்லாமியநிலையத்தின் அன்பு அன்னையாக, ஆசிரியையாக, சிறந்த ஆலோசகராக, நல்ஒத்துழைப்பு நல்கும் நற்குண நாயகியாக, அனைவரும் பின்பற்றிச்செல்லக்ககூடிய வடிவமாக நாளும் வலம்வந்து கொண்டிருக்கிறார் நம்மத்தியில்...!

வல்ல இறைவன் இவ்வாறான இலட்சியப் பெண்கள் மூலம் நம் சமுதாயத்தில் அடுக்களையுடன் தம் வாழ்வை அடுக்கி வைத்து முடித்துக்கொள்ளும் மகளிர் சிந்தனைகளை வீறுகொண்டு விழித்தெழச்செய்து சமுதாயத்தில் இன்ன பல நல்வளங்களையும் செம்மைப்படுத்துவானாக...!!

*- ரவ்தாவிலிருந்து ராபிதா*



## IPC சால்மியா கிளை கல்விச் சுற்றுலா!



IPC சால்மியா கிளை சார்பாக கடந்த மாதம் அறிவியல் ஆய்வுக் கழகத்துக்கு (Scientific Research Centre) கல்விச் சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய சகோதரிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட இந்த பயணக்குழுவில் இந்திய-இலங்கை சகோதரிகள் ஏறக்குறைய ஐம்பது பேர் கலந்து கொண்டனர். IPC இஸ்லாமிய அழைப்புப்பணி சகோதரிகள் *ஷகீரா பஷீர்* (சால்மியா கிளை), *ஆயிஷா ஃபாலிஹா ஃபாருக்* (ரவ்தா கிளை) ஆகியோர் பயண ஏற்பாட்டை வழிநடத்திச் சென்றனர்.

வேற்றுமை மாச்சர்யங்கள் களைந்து 'எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் குலம்" எனும் உயர் கண்ணோட்டத்தை கொண்ட ஒரு உன்னத மார்க்கமே இஸ்லாம் என்பதை வலியுறுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக இந்த பயணம் அமைந்தது என்றால் அது மிகையல்ல!

*'மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகம் ஆகிக்கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம். அல்லாஹ்விடம் அதிக கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்தான்.'* (49:13) எனும் திருக் குர்ஆனின் வாய்மொழிக்கேற்ப பரஸ்பர அறிமுகங்களுக்கும், அன்பு பரிமாற்றங்களுக்கும் வழித்தடங்கள் அமைத்துத் தந்தது இந்த கல்விப்பயணம்!

மேலும், இவ்வாறான அறிவுசார் இடங்களுக்குச் காட்சியுலா செல்வது, அல்லாஹ்வின் அற்புதங்களைப் பார்ப்பது - மனிதன் நேரிய வழியைத் தேர்ந்தெடுப்பதற்கும் அதனை செப்பனிட்டுக் கொள்வதற்கும் உந்து சக்தியாக அமைவதுடன் அவனின் வாழ்வாதாரமாக அமையும் நல்லறிவை அவன் மேலும் தீட்டிக் கொள்ளவும் வழிவகை செய்கின்றது.

*-சௌந்தர்யம்*







# அறிவுப்பாரின் விழிகள்..!எம் வாழ்வின் ஒளிகள்..!!


"கற்பது நன்மையானது, கல்வியைத் தேடுவது வணக்கமாகும்,அதனைக் கூடிக்கற்பது அல்லாஹ்வைத் துதிப்பதாகும்,அதனைத் தேடிச் செல்வது அல்லாஹ்வின் பாதையில் போராடுவதாகும்,அறியாதோருக்கு அதனைக் கற்றுக் கொடுப்பது தர்மமாகும்,அறிவுடையோருக்கு அதனை வழங்குவது வணக்கமாகும், அது தனிமைக்குத் துணை, தனித்திருப்பவருக்குத் தோழன்.,,

அறிவு பற்றி நபித்தோழர் முஆத் இப்னு ஜபல் (இறைவன் அவர்களைப் பொருந்திக் கொள்வானாக) அவர்களின் கூற்று இது! அறிவின் சிறப்பை பூரணமாக செதுக்கியுள்ளது இவ்வாசகப்பிழம்புகள். ஒருவனின் இதயம் அறிவின் ஒளிகளால் மட்டுமே அழகு பெறும் என்பது திண்ணம். ஒரு சமூகத்தின் ஜொலிப்பு அழகூட்டப்படுவது அறிவுக் கிரீடங்களாலேதான் எனில் அது மிகையல்ல!

ஒருவன், தான் காரிருளில் விடப்பட்டிருப்பதை உணர்கின்றான். எங்கும் கும்மிருள்! எங்கு செல்வது? எப்பாதையில் செல்வது? எவ்வாறு செல்வது? ஒன்றும் புரியவில்லை, அவனுக்கு! ஆபத்தான பாதுகாப்பான இடங்களை அறிந்து கொள்ள முடியாத நிலை அவனுக்கு.

இப்போது அவனுக்குத் தேவைப்பட்டதெல்லாம் ஒளி, அவன் ஒளியைத் தேடினான். யாராவது வழிகாட்ட மாட்டார்களா என அவனது உள்ளம் ஏங்கியது. அவ்வாறிருக்கையில் அவனது பாதங்களில் சில கற்கள் தட்டுப்பட்டன. அவற்றுள் இரண்டை எடுத்து உரசித்தட்டினான். தீப்பொறிகள் வெளியாயின. தொடர்ந்தும் முயற்சி செய்து நெருப்பை உண்டாக்கி அதனால் விளக்கேற்றினான். இருள் நீங்கியது், இதனால் பாதை தெளிவாகியது. நேரான பாதையில் சென்று ஒரு இலக்கையடைவான் அவன்!

ஒளியே ஒருவனுக்குக் கிட்டாது போனால் அவன் வாழ்க்கைப் பாதையில் இடறி இதர பல துன்பங்களுக்கும் உள்ளாக நேரிடும்.



அறியாமை எனும் இருளில் மூழ்கி இருப்பவனின் கதி இவ்வாறே! நேர்வழிக்கு இட்டுச் செல்லும் பாதை எது என்று தெரியாது நன்மையையும் தீமையையும் பிரித்தறிந்து கொள்ள முடியாது தவிக்கின்றான். தான் மீட்சி பெறக்கூடிய பாதை எது, எப்பாதை அதளபாதாளத்தில் தன்னைத் தள்ளிவிடும் என அறியாதவனாக ஆதங்கப்படுவான்.

அறிவெனும் ஒளி அதிகரிக்க அதிகரிக்க அறியாமை இருள் அகன்று, ஒளிச்சாரல்களால் அவன் உள்ளம் நிரப்பப்படும். நேரிய பாதையில் அவன் பாதங்கள் பயணிக்கும். எனவே மனிதன் தன்னை நேர்வழிக்கு இட்டுச் செல்லும் நல்லறிவைத் தேடிக் கற்றுக் கொள்ளக் கடமைப்பட்டவன்.

பல்வேறு மதங்களும் அறிவை வலியுறுத்துகின்றன. அவற்றைப் பெறுவதில் ஆர்வம் காட்டத் தூண்டுகின்றன. ஆனால், உலகவாழ்வின் முழு பலனையும், அதையும் தாண்டி மரணத்துக்குப் பின்னும் பயன்தரக்கூடிய வகையிலான அறிவையும் பெறும் வகையில் அவை பாதை அமைத்துத் தருகின்றனவா என்று பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இன்றைய அறிவின் தரத்தை இரண்டு வகைகளில் மட்டும் பயன்படுத்துகின்றான் மனிதன். ஒன்று: தேடிப் பெற்ற அறிவு எதற்கும் பயன்படாது விழலுக்கு இறைத்த நீராய் ஆகிவிடுகின்றது. இரண்டு: பெற்ற அறிவு அன்றாட வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளைப் பெறுவதற்காக குறிப்பிட்ட வட்டத்துக்குள் சுருங்கிவிடுகின்றது. இந்த போக்கு உலகம் முழுவதும் அனைத்து மனிதர்களிடத்தில் வியாபித்து நிற்கின்றது அவர்கள் ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரியே! இதற்கு அதிமுக்கிய காரணம் அறிவைத் தேடிப் பெறுவது ஆண்-பெண் இருபாலார் மீதும் கடமை என்பதை மனித சமூகம் உணராததுதான்.

இதோ, மீண்டும் ஒரு கல்வி ஆண்டு ஆரம்பிக்க இருக்கின்றது. புத்தக சுமையுடன் பிஞ்சுகள் பள்ளிக்கு செல்ல ஆரம்பிக்கும் வேளை. அறிவின் ஆத்திச்சூடியை அவர்கள் கற்க ஆரம்பிப்பார்கள். பிஞ்சு முதலே அறிவின் முக்கியத்துவம் அவர்களின் உள்ளங்களில் விதைக்கப்பட்டால்தான் அவர்கள் வருங்கால மாமன்னர்களாக முடிசூட முடியும்.

இஸ்லாத்தைப் பொருத்தவரை, அறிவைத் தேடிப் பெற்றுக் கொள்வதற்கு முதலிடம் தரப்படுகின்றது. உலக அறிவு மட்டுமல்ல, மறுமைக்கும் பயன் ஈட்டித்தரவல்ல கல்வியை அது ஊக்குவிக்கின்றது.

திருக் குர்ஆனின் வசனங்கள் ஒரே தடவையிலின்றி காலத்திற்கேற்றாற் போல் சிறிது சிறிதாக அருளப்பட்டது. இவற்றுள் முதலாவதாக இறங்கிய வசனமே கற்குமாறும் வாசிக்குமாறும் ஏவுகின்றது. இதிலிருந்து அதற்கு வழங்கப்பட்டுள்ள உயரிய அந்தஸ்து எத்தகையதென்பது நன்கு தெளிவாகின்றதல்லவா?.

அந்த இறைவசனம்: "(நபியே! அனைத்தையும்) உங்களது இறைவனின் பெயரால் ஒதுவீராக!."(96:1) உண்மையில் அறிவின் மூலமே ஒரு மனிதன் சமுகத்தில் ஒளிமயமான வாழ்வையும் சமுக நன்நிலையையும் பெற்றுக் கொள்கின்றான். மேலும் இறைவன், அவனது மதிப்பைக்கூட இருமையிலும் உயர்த்துவான்.

மனிதர்களுக்கு மத்தியில் அவனது பெருமை போற்றத்தக்கதாக இருக்கும். ஈருலக வாழ்வுக்கும் நன்மை பயக்கும் அறிவைத்தேட நம் பாதங்கள் புறப்பட வேண்டும். ஒரு உயரிய வணக்கமாகக் கருதப்படுகின்ற கல்வியானது அவனுடைய இவ்வுலகத்தின் சத்திய வாழ்க்கையை தேர்ந்தெடுப்பதற்கு உறுதுணை அளிப்பதுடன் அவனின் செயற்பாடுகள் சமுக நல்வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றுகின்றது.

எனவே நவவிடிவைத் தேடும் அன்பு நெஞ்சங்களே! அறியாமை, சந்தேகம் எனும் இருள் மேகங்களைக் கிழித்துக் கொண்டு வரும் அறிவுத்தூவானத்தில் எம் அகங்கள் நனைந்து தண்குளிரில் சுகம் அடைய முயற்சிப்போம்.

■

எழுத்து



*ரியாஸா*
*ஃபர்ஸானா*
*ரஃபீக்*



*உலக வசதிகள் வாழ்வை அலங்காரமாக்கி மமதையில் ஆழ்த்த... நம்மில் எத்தனையோ பேர் தாம் பெற்ற வளவாழ்வையே உண்மையான சுபிட்மான வாழ்வாகக் கருதி பொய்யான மனஆறுதலுடன் வாழ்ந்து வருகின்றோம். இத்தகைய போலி சுபிட்ச மாயையிலிருந்து விலகி உண்மையான சுபிட்சம் தேடி தன் துணைவருடன் புறப்பட நாடிய ஒரு மேல்தட்டு நவநங்கையின் உள்ளக் கிடக்கையின் தார்மீக தடங்கள், அவளின் ஏற்றமிகு எண்ணங்களாக... வசந்தம் வாசகர்களுக்காக...!*

# சுபிட்சம் தேடி..!

எழுத்து



*ஸினூ.ஃபா அன்ஸார்*

நான் வாசித்துக்கொண்டிருந்த புத்தகம் ஒன்றின் சில வரிகள் என் சிந்தனை ஓட்டத்தை நிறுத்தி எனக்குள் இவ்வினாவை பல முறை எதிரொலிக்க வைத்தது. ஆம்! என் எண்ண ஓடங்களை புதிய சிந்தனைகளில் புடம் போடச் செய்த அந்த வினா இதுதான்:

'நீ சுபிட்சமாக இருக்கின்றாயா?"

சுபிட்சத்தையும் சந்தோஷத்தையுமே கண்டுள்ள என் வாழ்க்கையின் நிழற்படம், என் நினைவுகளில் நிழலாடத் துவங்கியது. ஒரு செல்வச்சீமாந்த-ஆடம்பர வாழ்வு வாழ ஆசைப்பட்டேன். வாழ்க்கையும் எனக்கு அவ்வாறே அமையப்பெற்றது. சந்தோஷவானில் இறக்கை கட்டிப் பறந்தேன். மாட,மாளிகையில் என் வாழ்க்கை நாழிகைகள் மகிழ்வின் மங்களத்தோடு கடந்தன.

என் கணவரின் தொழில் வெளிநாட்டுத் தொடர்பு கொண்டதால் அடிக்கடி நானும் அவருடன் வெளிநாடுகளுக்கு போயிருக்கின்றேன். இணையில்லா இன்ப உலகப்பயணங்கள் அவை! வாழ்க்கையில் மறவா சின்னங்கள், அத்தரிசனங்கள்!! எத்தனை நாட்டு உணவு வகைகளை என் நாவு ருசித்துள்ளது என்பதை எண்ணிட முடியாது. அழஅழகான ஆடைகள் அணிவது எனக்கு மிகவும் பிடிக்கும். என் கணவர் கூட என் ரசனைக்கேற்றவாறு வாங்கித்தருவதில் அவருக்கு நிகர் அவரேதான். எல்லா வகையும் அடங்கிய சுபிட்ச வாழ்வில் என் மனம் விமர்சனமின்றி வியாபித்திருந்தது. எனக்குக் கிடைத்துள்ள இந்த வசதியான வாழ்க்கை, அதற்கு அடித்தளம் அமைத்துத் தந்த என் அன்புத்துணைவன், எம் அன்புக்குப் பரிசாக என்னுயிர் வாரிசுகள் இன்னும் பல.. பல..!

நாட்கள் நகர்ந்து, என் வாழ்க்கைப்புத்தகத்தின் பொன்னேடுகளை பவ்யமாகப் புரட்டிக்கொண்டிருந்தது. என்னை சூழ்ந்துள்ள ரம்மியமான இந்த வாழ்க்கைத் தடங்களின் சுபிட்சரேகைகள் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருவதை என் மனம் உணரத்துவங்கியது.

அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் நான் வாசித்த அப்புத்தகத்தின் வரிகள் என் மனதை அலைகழித்துக்கொண்டிருப்பதை நான் உணர ஆரம்பித்தேன். என் சந்தோஷத்தின் சுகந்தத்தை தற்போது ஒருவித கஷ்டத்துடன் நுகர ஆரம்பித்தேன். மீண்டும் அப்புத்தகத்தை கையில் எடுத்து அதன் பொன்னேடுகளைப் புரட்டினேன். இதோ, என் விழிகளைத் தன்பக்கம் நிலைகுத்தச் செய்து சிந்தனையை சீர்தூக்கச் செய்த அவ்வைரவரிகள்:-

*ஒரு மனிதர் இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்களிடம் வினவினார். எப்போது ஒரு மனிதன் சுபிட்சத்தை,நிம்மதியை பெற்றுக்கொள்கின்றான்? இமாம் அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்: 'ஒருவருடைய பாதங்கள் முதலாவதாக சுவனத்தில் பதிக்கப்படும் போது!*

இவ்வசனங்கள் நித்தமும் என் செவிகளில் ரீங்காரமிட்டுக் கொணடே இருந்தன. கண்ணாடி முன் நின்று என்னை நானே பலமுறைக் கேட்டுக் கொண்டேன்: என் யதார்த்த வாழ்க்கையில் இது வரை நான் எந்த வெறுமைகளையோ வாட்டங்களையோ உணரவில்லை. அதனால் என் வாழ்க்கை சுபிட்சத்தில் குறைகளின் சுவடுகள்கூட தென்பட்டதில்லை. அப்படியாயின், என் உண்மையான சுபிட்சம் எதிலுள்ளது? எவ்வாறு அந்த உண்மையான சுபிட்சப் பாதையை நான் கண்டு அதனை அடைந்து கொள்வது? இவ்வாறாக, என் மனவெளியில் கேள்விச்சூறாவளி பலமாக வீசி சுழன்று கொண்டிருந்தது. நவவிடியல் வாழ்வின் புதிய சுபிட்சம் தேடி, என் பாதங்கள் பயணிக்க ஆரம்பித்தன. அச்சுபிட்சத்தை எத்திசையிலிருந்து நான் தேடத்துவங்குவேன்..? என் மனம் சிந்தனையில் மூழ்கியது!

அதற்காக என் வாழ்க்கையின் முழுவடிவமாக, என் சந்தோஷ நாட்களின் உண்மை ஜீவனாக, வசந்த விடியலின் நம்பிக்கை கதிரவனாக இருக்கும் என் கணவரையே நாடுவோம் என்ற ஏகஎண்ணத்துடன் என் மனம் முடிவு செய்தது.

வாழ்க்கையின் பாதி நாட்களை வெளிநாடுகளில் கழித்து வருகின்ற என் உயிர்க்காதலனின் வருகைக்காக நான் காத்திருந்தேன். குறிப்பிட்ட அந்த தினமும் வந்தது. வழக்கம்போலவே எனக்காக அவர் கொணர்ந்த பொருட்கள் என் ரசனைக்கு ஏற்றாற் போலிருந்தன. பிள்ளைகளுக்கு உரியவற்றை எடுத்து வைத்த என் கரங்கள்,எனக்குரிமையான ஏனையவற்றை நுனிப்புல் மேய்ந்தாற் போல் பார்வைகளுடன் நிறுத்திக் கொண்டதை என் கணவர் கவனிக்கத் தவற வில்லை. ஏன், என்னவாயிற்று எனும் கேள்விக்கணைகள் அவரிடமிருந்தே முந்திக்கொண்டன. அவருக்கான கடமைகளை முடித்து விட்டு நிம்மதியான உரையாடலுக்காக அமர்ந்தேன். என்னிலிருந்து மடைதிறந்த வெள்ளம்போல் அதேவேளை நிதானமாக வந்த, செறிவுமிக்க சிந்தனை சொற்களை பொறுமையுடன் செவிமடுத்துக் கொண்டிருந்தார், என்னவர்!



'உங்கள் அன்பும், என் மீதான உங்கள் அக்கறையும் நிச்சயமாக நான் மனப்பூர்வமாக நன்றி செலுத்துவதற்கு உரித்தானவையே! ஆனால் அதனையும் மீறி நிம்மதியும் சுபிட்சமும் நீங்கள் எனக்கு அள்ளித்தந்துள்ள இவ்வாழ்க்கை வசதி வாய்ப்புக்களில் உண்மையாகவே காணப்படுவதில்லை என்கின்ற ஒரு உணர்வு எனக்குள் ஏற்படுகின்றது. திருமணமான புதிதிலும் சரி, இன்றைய நொடிப்பொழுது வரையிலும் சரி, நீங்கள் என்னுடன் அளவளாவிய இனிய சொற்கள் இன்னும் என் செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றனவே! பல்வேறு இடங்களுக்கு சென்று, பலதரப்பட்ட உணவு வகைகளை ருசித்ததன் சுவையை எண்ணி என் நாவில் இப்போதும் எச்சில் ஊறிக் கொண்டிருக்கின்றதே! நீங்கள் தந்த சிறந்த ஆடைகள் இன்னும் என்னை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றனவே! உலகின் நாடுகள் பலவற்றுக்கும் சென்று நீங்களும் நானும் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் நமது நினைவுகளில் இன்னும் அழியாச் சின்னங்களாக நிழலாடிக் கொண்டிருக்கின்றனவே!

*ஒருபுறம், வசதிகளும் வனப்புக்களும் என்னை வளைய வந்துகொண்டிருக்க, மறுபுறம், சுபிட்சமும் நிம்மதியும் தூரநின்று என்னை பரிகசிப்பதாய் உணர்கின்றேன்.*

என் அன்புக்கணவரே! இதோ, இந்தப்புத்தகத்தின் சிந்தனைமிக்க வரிகளை நான் நிறையவே வாசித்துவிட்டேன். அதன் அடிப்படையில், நான் கூறப்போவது நீங்கள் மறந்திருக்கும் ஒரு அம்சத்தை உங்களுக்கு மறுநினைவூட்டுவதற்காகவே அன்றி, உங்களைக் காயப்படுத்துவதற்காக அல்ல, என்று கருதுங்கள். அப்போதுதான் அதன் ஆழிய உண்மை உங்களுக்குப் புரியவரும்."

மேலும், நானே தொடர்ந்தேன். எந்தப் பெண்ணும் தன் கணவனின் நிழலிலேயே, தன் வாழ்வின் இலட்சிய பிம்பம் இலங்க வேண்டும் என ஆசைப்படுவாள். அதுவே யதார்த்த அம்சமும் கூட! 'இவ்வுலக வாழ்வின் எல்லாவிதமான சுக-சவுகரிகங்களையும் தம் மனைவியும் பிள்ளைச் செல்வங்களும் முழுமையாக அனுபவிக்க வேண்டும்" என்பதே எல்லாக் கணவர்மாரினதும் கனவு. அவர்களின் களைப்புக்கள்கூட அக்கனவுகளில் கரைந்து காணாமற் போய்விடும். அவ்வேளையில் இவ்வுலகத்தின் நிரந்தரமற்ற நிதர்சனதன்மையை இருபாலாரும் மறந்துவிடுவதுண்டு! இவ்வுலக இன்பத்திற்காகவே அவர்களுடைய அவாக்கள் அழகு பெற்று, முயற்சிகள் வலுப்பெறுமே தவிர, ஒரு நித்திய தினத்தை அவர்கள் தங்களுக்குள் நிறுத்தி வைக்க தவறிவிடுகின்றனர்.

இனிய சொற்களுடன் தேனாறு பாய வைத்த நீங்கள், எமது இறைநம்பிக்கையை வலுப்படுத்தும் இனிய அறிவுரைகள் எத்தனை தந்தீர்கள்?

எமக்கு இத்துணை வசதிகளை அளித்த இறைவன் திருக் குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான் "*ஆயினும் இறையச்சம் (தக்வா) எனும் ஆடையே மிகச்சிறந்த ஆடையாகும்! (7:26)* அப்படியிருக்க, அழிந்துபோகும் உலகஆடைகளால் என்னை அலங்கரித்த நீங்கள் இறையச்சம் எனும் விலைமதிப்பற்ற ஆடையை அணிவித்து எனது ஆன்மாவை அலங்கரிக்க முயன்றீர்களா?

உலகின் பல்வேறு நாடுகளுக்கும் என்னை அழைத்துச் சென்று புகைப்படமும் ஒளிப்படமும் எடுத்துத்தள்ளி அழகுடன் வடிவமைத்து பொக்கிஷமாகப் பாதுகாத்து வரும் நீங்கள், கடமையான ஹஜ் அல்லது உம்ரா நிறைவேற்ற எமது பாதங்களை புனிதமக்காவுக்குப் பயணிக்கச் செய்தீர்களா?

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு பார்க்கும்போது



உண்மையில் (உலக)பணக்கார (மறுமை) ஏழை நான்! ஆம்! நான் ஒரு பரம ஏழையே!!

ஒருபுறம், வசதிகளும் வனப்புக்களும் என்னை வளைய வந்துகொண்டிருக்க, மறுபுறம், சுபிட்சமும் நிம்மதியும் தூரநின்று என்னை பரிகசிப்பதாய் உணர்கின்றேன்.

என் மனநாயகனே! இறந்தகாலம் இறந்ததாகவே இருக்கட்டும்! வாருங்கள், உண்மை சுபிட்சம் தரும் இறைபாதையில் எம் பாதங்களை நடைபயிலச் செய்வோம். இருமை வாழ்வின் இனிய வெற்றிக்குக் கட்டியம் கூற இப்போதே இணங்கிப் போவோம்.

உண்மை சுபிட்சம் தேடி இனிமேல் அவர்கள் பாதங்கள் பயணிக்கட்டும்.. அதேவழியில் எம் வாழ்வையும் நடைபோடச் செய்வோம். இறையருள் துணை நிற்கட்டும்!

*நன்கு அறிந்து கொள்ளுங்கள்: இந்த உலக வாழ்க்கை விளையாட்டும் கேளிக்கையும் வெளிப்பகட்டும் மற்றும் உங்களிடையே ஒருவருக்கொருவர் பெருமையடித்துக் கொள்ளுதல், செல்வங்கள் குழந்தைகள் ஆகியவற்றில் ஒருவரையொருவர் மிஞ்சிவிட முற்படுதலுமேயன்றி வேறில்லை.- திருக்குர்ஆன் 57:20)*

■



# வாழ்வின் ஔடதம், வடுக்களின் ஒத்தடம்!

எழுத்து



முஹம்மத் நளீம்

அன்பு......மூன்றெழுத்துக்கள் கொண்டு பிரசவம் பெற்றது இவ்வுலகத்திற்கு. அதன் பிம்பம் மனித மனங்களிலெல்லாம் பிரதிபலித்து அவர்களிடையே ஊடுருவிச்செல்ல, பரஸ்பரம் அந்த அன்பின் தாத்பரியத்தை பேணிக்கொள்ளக் கடமைப்படுவதுடன் அதற்கான வழிமுறைளை தம்முள் வரைந்து கொள்ள வேண்டும். அன்பின்றி அனைத்தும் அழகின்றிப் போவதும் அர்த்தமற்றுப்போவதும் உண்மையே!

மனித சுவாசங்கள் இன்பமடைந்து அவன் நடவடிக்கைகள் பிற அன்பூக்களால் மெருகூட்டப்படின் மனிதர்களுக்குள் உண்மை மனிதம் மலர்ந்து அவனின் சூழல் வாசைனயில் கமழும்.

தொடர்ந்தும் பரஸ்பர உறவிற்கு உரமிடக்கூடிய அன்பை உருவமைத்துக்கொள்ளும் வரிசையில் வரும் ஒன்றே இதய ஆழத்திலிருந்து வெளிப்படும் வாழ்த்துரையாகும்.

உலகில் ஒருவர் மற்ற ஒருவரை சந்திக்கும் போது பல வகையான சொற்களைக் கூறுவர். வணக்கம் என்றும், நமஸ்தே என்றும், ஹலோ என்றும் Good Morning, Good Evening , Good Night என்றும் பலவகையான சொற்களைப் பயன்படுத்துவர் இவற்றில் ஒரு சிறப்பான முறையை இஸ்லாம் கற்றுத்தருகிறது. இடம், பொருள், ஏவல் ஆகிய அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டதாகும் இந்த வணக்க வாழ்த்துமுறை. மனிதனின் சுயமரியாதையை சுருக்கி, பணிதல் குனிதல் எதுவும் அற்ற ஒரு சமத்துவமான சந்திப்பு முறையைக் கொண்டதாகும் இது!

அதுதான்! அஸ்ஸலாமு அலைக்கும்!

இதன் பொருள்: சாந்தியும் சமாதானமும் உங்கள் மீது நிலவட்டும்!

இவ்வாறு இருவர் சந்திக்கும் போது தீண்டாமையைக் களைந்தெறிகிறது இஸ்லாம். மேலும் 'இந்த சாந்தியான வாழ்த்தைப் பரப்புவது நம்மை சுவனத்தில் கொண்டுபோய் சேர்க்கின்ற செயல்" என்று முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஸலாமைப் பரப்புவதால் நீங்கள் ஒருவரையொருவர் மிக அதிகமாக நேசிக்கின்றிர்கள். அதனால் உங்களுக்கிடையில் பொறாமை,போட்டி,பகைமை உருவாக வழியில்லை. எனவே உலகில் பரஸ்பரவ வஞ்சனையும் குழப்பமும் இன்றி அமைதியாக வாழ முற்படுகின்றீர்கள். இதனால் சுவனத்துக்கான பாதைகள் எளிதாக்கப்படுகின்றது என இஸ்லாம் கூறுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'இறைவன் ஆதம் (அலை) அவர்களைப் படைத்து அங்கு இருந்த வானவர்களுக்கு ஸலாம் கூறும்படியும் அதற்கு அவர்கள் என்ன பதில் கூறுகின்றார்கள் என்று செவியுறும்படியும் அதுதான் உமக்கும் உமது வழித்தோன்றல்களுக்கும் உரிய முறை என்றும் கூறினான். அப்போது ஆதம் (அலை)அவர்கள் சொன்னார்கள்: அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்! இதில் ரஹ்மதுல்லாஹ் என்பதை அதிகம் சொன்னார்கள்" ஆதாரம்: புகாரி

'இஸ்லாத்தில் மிக சிறந்த செயல் எது?" என ஒரு மனிதர் வினவ, 'உனக்கு அறிமுகமான அறிமுகமாகாதவர்களுக்கு ஸலாம் சொல்வதே" என்று நபியவர்கள் கூறினார்கள். ஆதாரம்: புகாரி முஸ்லிம்

*இவ்வாறு இருவர் சந்திக்கும் போது தீண்டாமையைக் களைந்தெறிகிறது இஸ்லாம். மேலும் -'இந்த சாந்தியான வாழ்த்தைப் பரப்புவது நம்மை சுவனத்தில் கொண்டுபோய் சேர்க்கின்ற செயல்!-என்று முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

நமக்கு அறிமுகமானவரோ, அறிமுகமில்லாதவரோ,எவராக இருப்பினும் ஸலாம் கூறவேண்டும் என்பதும் ஸலாம் கூறுதல் மிகசிறந்த நற்செயல் என்றும் இந்த நபி மொழியில் அறிந்து கொள்ளலாம்.

ஒருவரை சந்திக்கும் போது முந்திக்கொண்டு ஸலாம் கூறுவதால் இறைவனிடம் சிறப்புக்குரியவராக ஆக முடியும்! நாம் ஸலாம் கூறுவதால் பதிலுக்கு ஸலாம் கூறப்படுபவரிடமிருந்து ஒரு நல்ல பிராத்தனையையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இஸ்லாம் என்றாலே சாந்தி சமாதானம் என்றுதான் பொருள்! ஒருவர் மற்றவர் வீட்டில் நுழையும் முன் அனுமதி பெற்ற பின்னரே உள்ளே செல்ல வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது

இறைநம்பிக்கையாளரே உங்கள் வீடுகள் அல்லாத பிறர் வீட்டில் நுழையும் போது அனுமதி பெற்று ஸலாம் சொல்லாத வரை உள்ளே நுழையாதீர் (திருக் குர்ஆன் .24:27-28)

ஒரு வீட்டில் நுழைய அனுமதி கேட்கும்போது கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்கு முறைகளும் உள்ளன. கண் போனபோக்கிலே அலையவிடாமல் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். பிறர்வீட்டில் நுழைவதற்கு அனுமதி பெறுவது மார்க்கச் சட்டமாக்கப்பட்டது, பார்வையின் காரணத்தினால்தான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம்-புகாரி

உண்மையான முஸ்லிம் இவ்வுலகில் சாந்தி சமாதானத்தை விரும்புவனாகவும் அதை பரப்புவனாகவும் இருக்கவேண்டும்

எனவே. உலக மக்களிடையே அன்பு பாலம் உருவாக்கும் இந்த ஸலாம் எனும் வாழ்த்தை பரப்புவோம்!

■





# மனித உரிமைகள்: ஓர் இஸ்லாமியப் பார்வை!



எழுத்து



முஹம்மத் ஜாபிர்

இன்றைய உலகில் மனிதஇன உரிமைகள் ஒரு மாபெரும் சர்ச்சைக்குரிய தலைப்பாக இருந்து வருகின்றது. மனிதனால், மனிதர்களுக்காக இயற்ப்பட்ட சட்டங்கள் அவனுடைய இந்த பிரச்னையை மெலும் சிக்லாக்குகின்றனவே தவிர, தீர்வுகளைத் தருவதாக இல்லை!

இறைவன் இப்பேரண்டத்தின் நிகரற்ற தனித் தலைவனாக, பேரதிபதியாக இருக்கின்றபடியால், கருணையாளன். மனிதர்கள் தம்முடைய தன்மைகளில் எவ்வளவு வேறுபட்டிருந்தாலும் ஒன்றிணையலாம். சம உரிமையையும் நிலைநாட்டலாம். அவர்களிடம் மேலோட்டமாக பல வேற்றுமைகள் தென்பட்டாலும், இன- நிற-மொழி அடிப்படையில், பிரதேச அடிப்படையில் பல வேறுபாடுகள் இருந்தாலும் அவை அடிப்படையானவை அல்ல. மனிதர்கள் அனைவரும் ஏக இறைவனின் படைப்பினங்கள் எனும் வகையில் அவற்றைக் களையலாம். இவ்வாறு கருணைமிக்க ஒரே இறைவனுக்கு அஞ்சிப் பணிகின்ற காரணத்தால் மனிதர்கள் அனைவரும் சகோதரர்களே!

மனித இரத்தம் புனிதமானது. எந்நிலையிலும் அதனை அநியாயமாக சிந்தக் கூடாது. இந்தச் சட்டத்தை மீறி ஒரு மனித உயிரை அநியாயமாக கொலை செய்பவர் மனிதகுலம் முழுவதையும் கொலை செய்தவரைப் போன்றவராவார்.திருக் குர்ஆன் கூறுகிறது :பூமியில் குழப்பம் ஏதுமற்ற நிலையில் அநியாயமாக ஒருவரை கொலை செய்பவர் (இறந்தவர் மீது கொலைப் பழி இல்லாத நிலையில்) மனித குலம் முழுவதையுமே கொன்றவர் போன்றவராவார். (5:32)

இஸ்லாத்தில் கூறப்ப்படுகின்ற மனித உரிமைகள் இறைவனால் வழங்கப்பட்ட உரிமைகளாகும். அவை ஏதோ ஒரு அரசாலோ, சட்ட மன்றத்தினாலோ வழங்கப்பட்டவையல்ல. மன்னர்கள் அல்லது சட்ட மன்றங்கள் வழங்கும் உரிமைகள் ஒரு காலத்தில் ரத்து செய்யப்பட்டு விடலாம். இறுதி ஹஜ்ஜின் போது முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : (இறைவனை நீங்கள் சந்திக்கும் இறுதித் தீர்ப்பு நாள் வரை) ஒருவர் மற்றவரின் உடைமையை, உயிரைப் பறிக்கக் கூடாது.

மனித மாண்பின் பாதுகாப்பு குறித்து திருக் குர்ஆன் ஒருவரை ஒருவர் பரிகாசம் செய்யாதீர்கள்!அவதூறு கற்பிக்காதீர்.பட்டப் பெயர் சூட்டி இழிவு படுத்தாதீர்!புறங்கூறாதீர், தரக் குறைவாகப் பேசாதீர்! என்று கூறுகிறது! மேலும், உளவு பார்க்காதீர், உரியவரின் அனுமதியின்றி ஒருவரின் வீட்டுக்குள் நுழையாதீர்! என்று கூறி தனிநபர் வாழ்வின் புனிதத்தைப் பேணுகின்றது.

*மனித இரத்தம் புனிதமானது. எந்நிலையிலும் அதனை அநியாயமாக சிந்தக் கூடாது. இந்தச் சட்டத்தை மீறி ஒரு மனித உயிரை அநியாயமாக கொலை செய்பவர் மனிதகுலம் முழுவதையும் கொலை செய்தவரைப் போன்றவராவார்.*

கருத்துச் சுதந்திரம் :குடிமக்களின் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்தரத்திற்கு இஸ்லாம் முழு உத்தரவாதம் அளிக்கிறது. ஆனால் ஒரு நிபந்தனை, ஒழுக்க மேம்பாட்டிற்கு வாய்மைப் பரவுதலுக்கும் துணையாக அது அமைய வேண்டும். கொடுங்கோண்மை மற்றும் தீங்கு அதிகரிக்கலாகாது.கருத்துச் சுதந்தரம் பற்றி மேலைநாட்டினர் கொண்டுள்ள கருத்தோட்டத்தை விட இஸ்லாம் அளித்துள்ள கருத்துச் சுதந்தரம் சிறப்பானது. எந்தக் காரணத்தாலும் தீமைகள், அநியாயங்கள் பெருகுவதை இஸ்லாம் அனுமதியளிப்பதில்லை. விமர்சனம் என்ற பெயரில் பழி தாக்குதல், அத்துமீறல்களை இஸ்லாம் அனுமதிப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் இறையாணை ஏதேனும் உள்ளதா என்று முஸ்லிம்கள் முஹம்மத் நபி (ஸல்) அவர்களை விசாரிப்பது வழக்கம். அப்படி இறைக்கட்டளை எதுவும் வெளியாகவில்லை என்று நபிகளார் கூறினால், முஸ்லிம்கள் வெளிப்படையாக மனம் விட்டுத் தத்தமது கருத்துக்களைக் கூறுவார்கள்.

சட்டத்தின் பார்வையில் அனைத்து குடிமக்களுக்கும் பரிபூரண முழுமையான உரிமையை இஸ்லாம் வழங்குகிறது.

ஓர் உயர்ந்த வம்சத்துப் பெண் திருட்டுக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டாள். அந்த வழக்கு முஹம்மத் (ஸல்) அவர்கள் முன் கொண்டு வரப்பட்டது. திருட்டுக் குற்றத்திலிருந்து அவளை விடுவிக்க வேண்டும். தண்டிக்கக் கூடாது என்று சிலர் பரிந்துரை செய்தனர். அப்பொழுது முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :இதற்கு முன் வாழ்ந்த சமுதாயத்தினர், சாமானியர்கள் தவறு செய்தால் தண்டிப்பார்கள். மேட்டுக் குடிமக்கள் அதே தவறைச் செய்தால் தப்பிக்க விடுவார்கள். என் ஆன்மா யார் கைவசம் இருக்கிறதோ, அந்த அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மதின் மகள் ஃபாத்திமா இதே தவறைச் செய்தாலும் நான் அவர் கையைத் துண்டிக்காமல் விட மாட்டேன்.

இத்தகையதொரு சமநீதி மனிதஉரிமையைத்தான் இஸ்லாம் நிலைநாட்டியது!

■

# பொய்களின் இருப்பிடம்... பாவங்களின் திறப்பிடம்...!



நெஞ்சங்களை அழுத்தும் பொய் திரட்டும் நன்மைகளை விரட்டி அவனின் அன்பர்களின் அகங்களிலிருந்து அவனை அகற்றி கடைசியாக உள்ளத்து அமைதியை அவனை விட்டும் கழட்டி விடுகின்றது பொய் எனும் வன்மை......... .........

எழுத்து



உமைரா நூருல் ஹம்ஸா

ஆனால், அந்தோ! இறைஅடியார்களின் வாழ்வு இறைவன் காட்டிய வழிமுறைகளின் அடிப்படையில் அமைந்திருக்கின்றதா? சமூகத்தில் நேர்மையும் வாய்மையும் மங்கி பொய்யும் புரட்டுமல்லவா கோலோச்சுகின்றது! பொய்- அதனைப் பேசுபவன் தன்னைத்தானே அழித்துக் கொண்டிருக்கின்றான் என்பதை வெளிப்படுத்தும் கருவி. பொய் பேசுவதால் சமுதாயத்தில் அமைதியின்மை நிலவுவதோடு பாவம் செய்யத் தூண்டும் ஒரு கொடிய பழக்கமும் அசாதாரணமாக ஏற்பட்டு விடுகிறது.

பொய் மனிதனை முழுமையாகக் குழப்பத்தில் ஆழ்த்தி விடும். மனிதனின் முன்னேற்றத்தைத் தடுப்பது இந்தப் பொய்யே. மறு வார்த்தைகளில் கூறினால், பொய் சொல்வது கோழைத்தனத்தின் பகிரங்கப் பிரகடனமே அன்றி வேறில்லை! பேராசை, கஞ்சத்தனம் இவற்றின் ஊற்றுக் கண்களாகவும் அது அமைகிறது!

இறைவனின் பாதையில் போராட அழைக்கும்போது சில நொடிக் காரணங்களைக் கூறி, தப்பித்துக் கொள்பவர்களுக்குக் கூட (மறுமையில்) மன்னிப்பு வழங்கப்படலாம். ஆனால் பொய் சொல்வதையே வாழ்க்கையாகவும் அடுத்தவர்களை ஏமாற்றுவதையே வழியாகவும் கொண்டவர்களுக்கு (மறுமையில்) தப்பித்துக் கொள்வதற்கு எந்த வழியும் இருக்காது. ஆகவே, பொய் என்பது எவரிடமும் குறிப்பாக ஒரு இறை நம்பிக்கையாளரிடம் இருக்கவே கூடாத ஒன்று! இதனையே இறைவனின் தூதர் (ஸல்) இப்படிக் கூறினார்கள் “ஒரு இறை நம்பிக்கையாளனிடம் எல்லாத் தீமைகளும் இருக்கலாம் ஆனால், அவனிடம் பொய்யும் நேர்மையின்மையும் இருக்கக் கூடாது” (ஆதாரம் : அஹ்மத்)

இங்கு, ‘எல்லாத் தீமைகளும் இருக்கலாம்’ என்றால் எல்லாம் செய்யலாம் என்று எவறும் பொருள் கொள்ளக் கூடாது. அவற்றை விடப் பொய் சொல்வது பெரிய தீமை என்பதே இதன் பொருள்.

பொய் சொல்கின்ற ஒருவன் அப்பொய்யை எந்த அளவுக்குப் பரப்பிக்கொண்டே இருக்கின்றானோ, அந்த அளவு அவனது பாவத்தின் அளவையும் வளர்த்துக் கொண்டே செல்கின்றான். இவர்கள் மிகவும் கொடுமையான தண்டனையை அனுபவிப்பார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

> *பொய் சொல்கின்ற ஒருவன் அப்பொய்யை எந்த அளவுக்குப் பரப்பிக்கொண்டே இருக்கின்றானோ, அந்த அளவு அவனது பாவத்தின் அளவையும் வளர்த்துக் கொண்டே செல்கின்றான். இவர்கள் மிகவும் கொடுமையான தண்டனையை அனுபவிப்பார்கள்.*

“ஒரு நாள் இரவு இரண்டு மனிதர்களைக் கண்டேன் அவர்கள் என்னிடம் வந்து சொன்னார்கள், தன்னுடைய அலகுகளை (வாயை) அகல விரித்துப் பேசுபவர் எவரையாவது பார்த்தால் அவர் பொய் சொல்கின்றான் என்றே நினைக்க வேண்டும். அந்தப் பொய் அவன் வழியாகப் பரவலாகப் பரப்பப்படுகின்றது. அந்தப் பொய் அவன் வழியாக இந்த உலகம் முழுவதும் பரவுகின்றது. அவன் இறுதி நாள் வரை இதனையே செய்து கொண்டிருப்பான்.” (பத்ஹுல் பாரி)

பிறிதொரு நபி மொழி இப்படி அறிவிக்கின்றது, “ மூன்று பேர் சுவர்க்கம் புக மாட்டார்கள், முதலாவதாக வயதான நிலையிலும் விபச்சாரத்தில் ஈடுபடுபவன், இரண்டாவதாக பொய் சொல்பவன், மூன்றாவதாக பெருமை கொள்பவன்”

பெரியவர்களிடம் சொல்லப்படும் பொய்க்குத்தான் தண்டனையுண்டு என்பது நம்மில் சிலரின் அலட்சியமாக இருப்பதுண்டு! சிறியவர்களிடம் பொய் சொல்லலாம் எனப் பொடுபோக்காக இருக்கும் அவர்களுக்கு இந்த நபி மொழி சாட்டையடி தருகிறது:- பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் பின்வருமாறு அறிவிக்கிறார்கள்: “ ஒரு குழந்தையை அழைத்து அந்தக் குழந்தையிடம் நான் இன்னதை உனக்குத் தருவேன் எனக் கூறுபவர்கள் அதனைத் தரவில்லையென்றால் அவர் அங்கே ஒரு பொய்யை சொல்லிவிட்டார்” (ஆதாரம் : அஹ்மத்)

எனவே, பொய் எனும் சாபத்தை எம் வாழ்விலிருந்து விட்டொழிப்போம். உண்மைக்கு உண்மையாக இருப்போம்! ■






# அறிவுக் குறுக்கெழுத்து - 2

## பெறுமதியான பரிசுகளை வெல்லுங்கள்!

விதிமுறைகள்

1. இக்குறுக்கெழுத்துப் போட்டியின பெரும்பாலான வினாக்களுக்குரிய விடைகளை“வசந்தம்” -மே 2008 இதழிலிருந்து பெறமுடியும்.
2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்!
3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை!
4. பெயர், தொலைபேசி,எண்,குவைத்அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு (Passport) எண் குறிப்பிடப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும்.
5. ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி இருப்பின் குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
6. வெற்றியாளர்கள் 3 பேருக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.
7. போட்டி குறித்து வசந்தம் போட்டிக் குழுவினர் தீர்ப்பே இறுதியானது
8. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தபால் மூலமாகவோ (முகவரி முதல் பக்கத்தில்) IPC தலைமையகத்திலோ அல்லது கிளைகளிலோ அல்லது 2400057 (Attn: VASANTHAM) எனும் Fax-தொலைநகல் மூலமாகவோ அல்லது amusavir@gmail.com எனும் email-மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம். அல்லது பின்வரும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம்.- DANA Textiles - மினா பஜார்,மிர்காப் -SEEMATY, மிர்காப் - Peoples Restaurant,மிர்காப்--Careem Lanka,மிர்காப் -Abraar-al-Deerah,Studio SriLanka,மிர்காப் - IPC அம்காரா கிளை மற்றும் சுலைபியா கிளை
9. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் வந்து சேரவேண்டிய இறுதி தேதி 20.07.2008



அடைப்புக்குறிக்குள் உள்ள எண்கள் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்!

**இடமிருந்து வலம்.**

1.மடமை யுகத்தில் சிலர் இதனையும் கடவுளாகக் கருதினர்.(7) 16.இறைவனைக் குறிக்கும் இன்னொரு பெயர் (4) 25.மனிதர்களின் தலையில் பொதிந்திருக்கும் இந்த தலைமைச் செயலகத்தின் செயற்பாடு மாறுகையில் கோளாறுதான் (2) 27.உருவத்தைக் குறிக்கும் இன்னொரு சொல் (4) 33.முதலாளித்துவத்துக்கு எதிராகப் பிறந்த தத்துவம் இது! குழம்பியுள்ளது.(6) 39.உலகின் அதிஉன்னத உறவு இது, காலடியில் சுவனம் கொண்டவள்! (2) 42.மனிதனுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களில் ஒன்று. இங்கு குழம்பியுள்ளது.(3) 61.இது சீர்கெட்டால் முழு உடலும் சீர்கெடும்.(4) 68.உலகின் முதல் மனிதர், ஒரு தூதுவரும்கூட!(3) 73.சத்தியத்துக்கு எதிரான இது என்றுமே வென்றதில்லை.(6) 85.தீவு ஒன்றை நாற்பக்கமும் சூழ்ந்திருக்கும் மாபெரும் நீர்நிலையை இப்படி அழைப்பர் (3) 91.யுத்த நாடுகளில் பாதிப்புக்குள்ளாகி புலம்பெயர்பவரை இவ்வாறு அழைப்பர். (3) 98.தாவரங்களின் அடிப்பகுதி இது,மண்ணில் புதைந்திருக்கும். (2)

**வலமிருந்து இடம்.**

35.கிழமைகளில் ஒன்று, இது பிடித்தால் தரித்திரம் என்று தவறாகக் கருதுவோரும் உண்டு.திரும்பியுள்ளது. (2)73. இஸ்லாமிய வரலாற்று யுத்தங்களில் ஒன்று. பள்ளத்துடன் தொடர்புடையது (3) 90. வில்லில் இதனை ஏற்றி அம்பெய்துவார்கள்(2)

**மேலிருந்து கீழ்**

1.பாவங்களின் சேருமிடம்.(4) 3.இக்கோடு மனித உள்ளங்களில் வரையப்பட்டால் சந்தோஷக்கேடு உண்டாகும். (5) 6.சண்டை சச்சரவை இப்படியும் அழைக்கலாம். கடைசி இரண்டெழுத்து வயல்வெளிகளில் பயிருக்கு இடையூறாக வளரும் ஒன்றைக் குறிக்கும் (3) 10.அடிக்கவும் - அணைக்கவும் பயன்படும் உடலுறுப்பு (3) 23.உடலுக்கு இப்படியும் பெயர். கடைசி இரண்டெழுத்து ஒட்டப் பயன்படும் ஒரு பொருளைக் குறிக்கும் (3) 27.ஆண்டுக்கு மறுபெயர்.(4) 39.இந்த மனப்பான்மை எவரையும் முன்னேற்றாது.(3) 42.இது இல்லாத வீடுகள், மனிதர்கள் உயிருடன் வாழும் புதைகுழிகள். இதற்கு நூல் எனும் பெயரும் உண்டு! (5) 44.சென்னையிலிருந்து வெளிவரும் ஒரு சஞ்சிகை, இங்கு குழம்பியுள்ளது(5) 56.வெட்டப் பயன்படுவது (3) 68.ஒரு கேள்விக்கு பதில் சரியெனில் -- என்று எழுதுவர். (2) 69.தாகத்தை தணிக்கக்கூடியது. குழம்பியுள்ளது. (4) 73.புயலுக்குப் பின் வரும் இது, மனித மனங்கள் எப்போதும் நாடுவது (3)75.IPC-இன் ஒரு கிளை குழம்பியுள்ளது (3) 76.பொருள்களின் மூன்று நிலைகளில் ஒன்று. உறுதிக்கு மறுபெயர் (3)

**கீழிருந்து மேல்**

27. தேருக்கு இது பிடிப்பார்கள். ஒரு உணவுப்பொருளுக்கும் இந்த பெயர் உண்டு (3) 50. இயங்கும் மனிதனை நிறுத்தி அவனைப் பலவீனமாக்கும். (2)

*அனைத்து விடைகளையும் நிரப்பிய பின்னர் வட்டமிட்ட சொற்களை ஒழுங்குபடுத்தினால் மனிதர்களுக்கு நேர்வழி காட்ட இறைவன் வழங்கிய மூன்றெழுத்து சொல் வரும்!*

☐ ☐ ☐

*பெயர்:*

*குவைத் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு எண்*

Civil ID OR Passport No:

☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

*தொலைபேசி:*

*வசிக்கும் இடம்:*

திண்மைத் தழுவல்கள்:

# வாழ்வியல் வசந்தம்!

அறிவுத்திசைகள் ஒருவனுக்கு சரியாகக் காண்பிக்கப்படும் போது அவன் சத்திய இலக்கை அடைந்து கொள்வான். சிந்திக்கும் பிராணி அவன் மனிதன். எப்படி சாத்தியமின்றிப்போகும்??
இஸ்லாத்தின் ஏகத்துவம், தூய்மை சமுதாய மனிதர் மத்தியில் இருக்கும் வேற்றுமை கலங்கங்களைப் போக்கி மனித மனங்களை ஒன்றுடன் ஒன்றாக இணைக்கும் மாபெரும் கருவியாகக் காணப்படுகின்றது என்பது மறுக்க முடியா உண்மை....ஒரே உணர்வுகளுடன் ஒரே வடிவமைப்புடன் படைக்கப்பட்ட மனிதன் ஏன் ஏற்றத்தாழ்வுகள் கொண்டு கூறிடப்பட வேண்டும்?? சமுதாயப் பிறழ்வுகள், வக்கிரக் குரோதங்கள், மனக்காயங்கள் யாவற்றிற்கும் அடித்தளமிட்டு அவைகளை அடையாளமிட்டு, அடிக்குறிப்பெடுத்துக் காட்டும் சாதிவெறியும் குலவேறுபாடும்,,.......

இத்தகைய உன்னத வாழ்வியல்நெறியை தனதாக்கிக் கொண்ட தமிழகத்தின் தஞ்சை தரணியைச் சேர்ந்த ஆர். இராஜசேகர் இந்து மதத்தின் சாதி வேறுபாடுகளால் மனம் வெறுத்துப்போய் சமநீதி நாடி இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டவர். "அனைவர்க்கும் சமநீதி அறிவுறுத்தி அதனை நடைமுறைப்படுத்தியும் காட்டிய முஹம்மத் (ஸல்) அவர்களே எனது இலட்சிய புருஷர்" என்று புளங்காகிதம் கொள்கின்றார், தற்போது பெயரை சகார் என்று மாற்றிக் கொண்ட இந்த புதிய சகோதரர்.

"மைல்கல்லையும், சாம்பலாகிப் போகும் மரத்தையும் வணங்குவது எவ்விதத்தில் பகுத்தறிவாகும்?" என்று நியாயமாக சிந்தித்து உருவமில்லா ஏகஇறைவன்பால் தன்வாழ்வை நடைபோடச் செய்த தமிழகத்தின் மயிலாடுதுறையைச் சேர்ந்த ஹரிஹரன் என்ற முஹம்மத் ஹாரிஸ், இலங்கையைச் சேர்ந்த தனது பௌத்த மனைவியையும் இஸ்லாமிய வாழ்க்கைநெறிக்குள் வரப்பெற்றவர்.

"வெயிலின் கொடுமையை அனுபவித்தவர்கள்தான் நிழலின் அருமையை உணர முடியும்" என்று உவமைத்தனமாக உரைக்கும் வி.குமார், தனது பழைய மதம் அறிவுறுத்தாத உண்மை விஷயங்களை தெள்ளத் தெளிவாக இஸ்லாம் முன்வைப்பதாக உவகை பொங்க கூறுகின்றார். தற்போது இவர் அப்துல்லாஹ்!

ஆண்கள் மட்டுமல்ல, மகளிரும் உண்மை ஒளியின்பால் நடைபோட்டுச் சென்று இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவல்களில் தம்மையும் இணைத்துக் கொண்டிருக்கின்றார்கள். உலக காதலில் உய்வுண்டு வாழும் உலகாயதவாதிகள் மத்தியில், "பத்து வருடங்களாக இஸ்லாத்தை காதலித்தேன்" என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் புவனேஸ்வரியின் உண்மைப் இலட்சியப் புகழ்ச்சியைக் கேளுங்கள்: "மனப்பூர்வமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் பொற்சந்தர்ப்பத்தை இறைவன் தந்தருளினான். இறைவனால் அனுப்பப்பட்ட தூதர்களின் வரலாற்றை நிறைய வாசித்தேன். அதனால் என் மனம் இஸ்லாத்தின் பால் சரிந்தது...இஇவ்வுலகமே நிரந்தரம் என வாழும் என் பாசக் குழுமத்தை இத்தூய மார்க்கத்தில் இணைப்பதே முழு நோக்கமாகும். இச்சத்திய மார்க்கத்தை முழு உலகுமே ஏற்றுக்கொள்ளும் தருணம் கிட்டும். என் அவாவும் துஆவும் - பிரார்த்தனையும் இதுவே!" இவர் தற்போது சகோதரி ஷர்மிளா-வாக தாய்மார்க்கமாம் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டவர்.

தீனார்களையே செல்வமாக நினைக்கும் மக்கள் மத்தியில் தான் பெற்ற உண்மைச் செல்வமாக தூய இஸ்லாத்தை ஏற்றதையே பெருமையாகக் கருதும் இந்த புதிய சகோதரி 'முஸ்லிம்களின் அன்றாட வாழ்க்கை முறைகள் ஒரு திட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது" என்று நற்சான்று அளிக்கின்றார், தற்போது ஃபாத்திமா-வாக மாறியுள்ள முன்னாள் இந்திராணி! அவர் மேலும் கூறுகையில், 'அதற்கு நேர்மாறாக இருந்த எனது இறந்த கால வாழ்வில் ஒரு வெற்றிடத்தைக் கண்டேன். பணமின்றி ஏழையாக குவைத் மண்ணை மிதித்தேன். இஸ்லாமிய அறிவுக் கருவூலங்களை எட்டு வருடங்களாக என் மனதில் விதைத்து கொண்டு வருவதால் தற்போது என் மனம் செல்வந்த நிலையில் இருக்கின்றது. அதுவே உண்மைச் செல்வமாக நினைக்கின்றேன்."

தான் பாக்கியமாக பெற்றது எதனை என்று கூறுகையில்,'இஸ்லாம் தூய்மையான ஒரு மதம் என்பதை பிற மதங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கையிலேயே அறிய முடிகின்றது. தொழுகையை நிறைவேற்றுவதில் பூரண திருப்தி அடைகின்றேன். என் பெற்றோருக்கு நேர்வழி காட்டி அதன் மூலம் என்னை முஸ்லிமாக இறைவன் பிறக்கச் செய்தான். அதுவே பெரும் பாக்கியமாக நினைக்கின்றேன்" என்கின்றார் அமுதி ஹஸன் என்கின்ற ஹஸீனா!

தொகுப்பு: பின்த் அன்ஸார்

"இச்சத்திய மார்க்கத்தை முழு உலகுமே ஏற்றுக்கொள்ளும் தருணம் கிட்டும். என் அவாவும் துஆவும் - பிரார்த்தனையும் இதுவே!"

புவனேஸ்வரி
என்கின்ற
ஷர்மிளா




"மைல்கல்லையும், சாம்பலாகிப் போகும் மரத்தையும் வணங்குவது எவ்விதத்தில் பகுத்தறிவாகும்?'

ஹரிஹரன்
என்கின்ற
முஹம்மத் ஹாரிஸ்



"முஸ்லிம்களின் அன்றாட வாழ்க்கை முறைகள் ஒரு திட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது"

இந்திராணி
என்கின்ற
ஃபாத்திமா



"அனைவர்க்கும் சமநீதி அறிவுறுத்தி அதனை நடைமுறைப்படுத்தியும் காட்டிய முஹம்மத் (ஸல்) அவர்களே எனது இலட்சிய புருஷர்"

ஆர் இராஜசேகர்
என்கின்ற
சகார்



'என் பெற்றோருக்கு நேர்வழி காட்டி அதன் மூலம் என்னை முஸ்லிமாக இறைவன் பிறக்கச் செய்தான். அதுவே பெரும் பாக்கியமாக நினைக்கின்றேன்"

அமுதி ஹஸன்
என்கின்ற
ஹஸீனா



'வெயிலின் கொடுமையை அனுபவித்தவர்கள்தான் நிழலின் அருமையை உணர முடியும்"

வி.குமார்
என்கின்ற
அப்துல்லாஹ்






உறுதி முடிவுகள் தாங்கி...
இறுதிமுடிவுகள் வரை வாழ்வோங்க..!
பகற்பொழுதில் பாரையே
ஒளியில் பரிணமிக்கச் செய்யும்
கணக்கதிர்கள் போல்..
இலட்சியங்கள் இலங்க...!

'ஒரு வாழ்விற்கு... மதம் பாரிய இடம்பிடிக்கும்!
அதில்... இறைகண்ணோட்டம் வேரூன்றச் செய்யும்!

"உங்கள் மதத்தின் இறை கண்ணோட்டம் யாது..?"



டாக்டர். ஜாகிர் நாயக்
துணிவாக வழங்கும்
"தெளிவான விளக்கங்களை"

உங்கள் இதயங்களுக்கு எடுத்துச் செல்லுங்கள்!
இருஉலகத்திலும் ஜெயத்தை வெல்லுங்கள்!!

இலகுதமிழில்.. இனியநடையில்..இனிவரும் வசந்தங்களில்...!
ஆகஸ்ட் '08 இதழ் முதல்...
'இளவேனில்'
இயற்றும்
மொழியாக்கத் தொடர் இனிதே ஆரம்பம்!




வலிமை மிகுந்த உருளைகளுடைய பெரிய தேர்களை கடலில் ஓட்ட முடியாது; அவை எவ்வளவுதான் வலிமையுடையதாகவும் பெரியதாகவும் இருப்பினும் சரியே!

கடல் போன்ற இறைநியதியின் முன்னால் தேர் போன்ற உங்கள் வலிமை உதவாது, அந்த இறைநியதிக்கேற்ப நீங்கள் இயங்காத வரை!

அந்த இறைநோக்கிய இலக்கு எது?

*அறிந்துகொள்ள...! அடைந்துகொள்ள...!!*

*இஸ்லாமிய நிலையம்*
*குவைத்*








Extn: 208 2444117

لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية

...رحمة للعالمين

www.ipc-kw.com